DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223

Siva & Joy Real Estate Team 416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc. "My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com

Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
பாலா லோகன் 647-447-1562
Bala Logendralingam
RE/MAX

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

MORTGAGE
NESAN 416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703
உதயம் 1287 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday December 4, 2020

# இந்தியாவில் விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த கனடிய பிரதமர் ட்ரூடோ



இந்திய அரசு கொண்டுவந்த வேளாண் சட்டத்துக்கு எதிராகப் போராடி வரும் விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ள கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, உரிமைகளுக்காக அமைதியான முறையில் போராடும் இந்திய விவசாயிகளுக்கு கனடா எப்போதும் ஆதரவாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

கனடாவின் டொராண்டோ நகரில் இந்தியர்கள் சார்பில் நடத்தப்பட்ட, சீக்கிய குரு, குரு நானக் தேவின் 551-வது பிறந்தநாள் விழாவில் கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ காணொலி மூலம் நேற்று முன்தினம் புதன்கிழமை பங்கேற்றார். (உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கம்)

# "நோய்த் தொற்று அதிகரிப்பது சமூக ஒன்றுகூடல்களிலிருந்தே ஒழிய திறந்திருக்கும் பாடசாலைகளிலிருந்தல்ல"

## -ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு



”நோய்த் தொற்று பாடசாலைகளிலிருந்து அதிகரிக்கக் கூடும் என்று சொல்பவர்களும் இருக்கின்றார்கள். ஆனால் அதில் உண்மையில்லை. சமூகத்தில் மக்கள் கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்காத காரணத்தால் தான் நோய் பரவுகின்றது பாடசாலைகளில் மாணவர்களை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பானவர் உள்ளார்கள். எனவே எமது திட்டத்தை குறை சொல்லுகின்றவர்கள் அதை நிறுத்தப் போவதில்லை. நாம் எமது பணிகளில் அக்கறையாகவும் கவனமாகவும் ஈடுபட்டு வருகின்றோம்” இவ்வாறு தெரிவித்தார், கனடா-வின் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் கௌரவ ஸ்டீபன் லெசி அவர்கள்.

கடந்த செவ்வாய்கிழமையன்று ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள பல்மொழி சார்ந்த பத்திரிகைகளின் ஆசிரியர்களோடு கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்காக நடத்தப்பெற்ற இணையவழி சந்திப்பின்போதே அமைச்சர் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
(விபரமான செய்தி உள்ளே 7ம் பக்கம்)

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000 Visit GtaCredit.Com

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905 794 4404

அறிவித்தல்களை உலகெங்கும் உடனுக்குடன் உங்கள் உறவுகளுக்கு கொண்டு செல்ல வேண்டுமா?
எமது கனடா உதயன் பத்திரிகையின் இணையத்தளமான www.uthyannews.ca இல் பிரசுரமாகும் அறிவித்தல்கள் மற்றும் அவசர விளம்பரங்கள் உதயன் பத்திரிகையிலும் அத்துடன் எமது சகோதர இணையத்தளங்களான www.nanban.ca மற்றும் www.voicefilankai.lk ஆகியவற்றில் பிரசுரம் செய்யப்படும்.
தொலைபேசி இலக்கங்கள்: கனடா +1 416-587-0552 கொழும்பு: +94 777 555 026 யாழ்ப்பாணம்: +94 7666143 074 சென்னை: +91 784500 6977

# MORTGAGE SOLUTIONS

# $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS

## $375 Mo.

## 416.298.2777

www.mortgageSolutions.ca

## MONTHLY SAVING $2,478

## SAVE UPTO 75% REFINANCE



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

# MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com



## GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244


## உதயன் கதிரோட்டம்

# தமிழ் மக்களால் கையளிக்கப்பட்ட அரசியல் பாதையில் திசை மாறிப் பயணித்தவர்கள் கைவிடப்பட வேண்டியவர்கள் ஆவார்கள்

இலங்கை அரசியலில் பாராளுமன்ற உறுப்பினர்களாகவோ அன்றி அமைச்சர்களாகவோ தேர்ந்தெடுக்கப்பட்டு பின்னர் பதவிகளில் அமர்வது மக்களுக்கு சேவையாற்றுவதற்காக என்றே நம்பப்பட்டது ஆனால் அந்த எதிர்பார்ப்பு அற்றுப்போகும் வகையிலேயே மேற்படி பதவிகளில் அமர்ந்திருப்பவர்கள் நடந்து கொள்வதும் பெற்றுக்கொண்ட அரசியல் பதவியை பிரயோகித்து அதிகார பலத்தைப் பெற்று அதன் மூலம் பண பலத்தைப் பெருக்கிக் கொள்வதே நோக்கமாகக் கொண்டே காலத்தைக் கடத்துவதை காணக்கூடியதாக உள்ளது. அதற்கு மேலாக மாகாண சபைப் உறுப்பினர்கள் பதவிகளும் அமைச்சர் பதவிகளும் அவ்வாறே பலனற்றவையாகவே மாறிவிட்டன. இங்கே நாம் பதிவு செய்த விடயங்கள் முழு இலங்கைக்கும் பொருந்தியதாக இருந்தாலும் நாம் கவனத்தைச் செலுத்துவது எமது தமிழ் பேசும் அரசியல்வாதிகள் பற்றியே. 2009ம் ஆண்டு விடுதலைப் புலிகளின் இருப்பு அரசியல் ரதியாகவும் இராணுவ ரீதியாகவும் ஸ்தம்பிதம் அடைந்தன் காரணமாக எமது தமிழ்த் தலைவர்களின் அரசியல் பயணம் எவ்வாறு பாதை மாறிய ஒன்றாக அமைந்து விட்டது என்பதை நாம் இங்கு விளக்கிக் கூற வேண்டிய அவசியம் இல்லை.

கடந்த தேர்தலில் வெற்றிபெற்றவர்கள், தோல்வியடைந்தவர்கள் என தமிழ்பேசும் அரசியல்வாதிகள் இன்னும் தமிழ் மக்கள் முன்பாக வந்து வந்து போகின்றார்கள். தமிழ் மக்கள் அவர்களை "வாருங்கள்! வாருங்கள்!!" என்று அழைக்காவிட்டாலும் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் கடசிகள் அவர்களுக்கு மேடை அமைத்துக் கொடுக்கின்றன. இதனால் அவர்கள் மீண்டும் மீண்டும் வருகின்றார்கள். பதவிகளிலும் அமர்ந்து கொள்கின்றார்கள். இந்த பதவிகளில் அவர்கள் அமர்ந்து கொள்வது என்பது மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப உள்ளதாக என்றால், அதுவும் இல்லை. காரணம் தொடர்ந்து முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்கள் அவற்றை வெளிக்காட்டுகின்றன.

உதாரணமாக புதிய அரசியலமைப்பிற்கான சிபாரிசுகளை இவ்வருடம் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி அரசாங்கம் கேட்டுள்ளது. இது குறித்து கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ் கட்சிகள் விவாதித்தன. பல ஊடகங்கள் இந்தக் கட்சிகளின் ஒன்றிணைவை 'தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவு' என்று குறிப்பிடுகின்றன. ஆனால் நாம் இந்தக் கட்சிகளில் எல்லாவற்றையுமே 'தமிழ்த் தேசியக் கட்சிகள்' என்று குறிப்பிடக் கூடிய அளவிற்கு தரவுகள் இல்லாமலிருக்கின்றன.

அது ஒரு புறமிருக்க,

மேற்படி கட்சிகளின் ஒன்றுகூடலின் போது, தமிழ் தேசியக் கட்சிகள் சார்பில் சிபாரிசு வரைவொன்றை சமர்ப்பிப்பதென முடிவாகியுள்ளது. ஆனால் அதற்கா தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் சிலர் தாங்களாகவே வந்து பதவிகளில் அமர்ந்து விட்டது போன்றே எமக்குத் தோன்றுகின்றது. இந்தக் குழுவின் தெரிவு தொடர்பாக தாயகத்தின் பல பகுதிகளிலிருந்து காட்டமான விமர்சனங்கள் எழுந்துள்ளன. எனவே இந்த தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் தொடர்பாக மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதையே பல தரப்பிலும் உள்ளவர்கள் விரும்புகின்றார்கள்.

**பதவி நோக்கம் கொண்டவர்களையே நம்பியிருப்பது மக்களை மீண்டும் பாதாளத்திற்கு அழைத்துச் செல்வதற்கு சமனானது…**


## BASEMENT வாடகைக்கு உண்டு

Birchmount / Eglinton
சந்திப்பிற்கு அருகில்
2 bedroom basement with separate entrance
மற்றும் எல்லாவித வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Close to TTC, subway, & shopping.
குடும்பம் விரும்பத்தக்கது.

Call: (416) 821-2181

## விசேட வாழைஇலைச் சாப்பாடு. ஓடர் செய்து பெற்றுச் செல்லுங்கள்

ஸ்காபுறோவில்
மோர்னிங்சைட் - செப்பர்ட்
சந்திப்புக்கு அருகில்
வாழை இலைச்சாப்பாடு மற்றும் Lumprice ஆகியவற்றை ஓடர் செய்து பெற்றுச் செல்லுங்கள்.
வெள்ளிக்கிழமைகளில்
வாழை இலையில் 6 மரக்கறிகளுடன் சாப்பாடு - $6.50.
சனிக்கிழமைகளில் மட்டன், சிக்கன் Lumprice - $14.00 மட்டுமே.

Call: (416) 832-6345

## அறை ஒன்று வாடகைக்கு

ஸ்காபுறோவில்
Kennedy / Eglinton
சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் basement இல் உள்ள அறை ஒன்று வாடகைக்கு உண்டு.
தளபாட வசதிகளும் உண்டு.
சமையல் அறை மற்றும் parking வசதியும் உண்டு.

Call: (647) 938-8525

## வீடு வாடகைக்கு

ஸ்காபுறோவில்
Sheppard / Morningside
சந்திப்புக்கு அருகில் உள்ள நான்கு அறைகள் கொண்ட வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு.
பஸ் வசதிகள், பாடசாலைகள், தமிழர் கடைகள் ஆகியன அருகில்.

Call: (416) 283-8275


# இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 129 ஆக இன்று அதிகரித்துள்ளது.



கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 05 பேர் சற்று முன்னர் பலியிகியுள்ளனர். கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 05 பேர் சற்று முன்னர் உயிரிழந்துள்ளதாக இராணுவ தளபதி சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை காலை இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 129 ஆக அதிகரித்துள்ளது.

# இலட்சக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்றமையே போர்க்குற்றம் என்றார் கஜேந்திரகுமார் சபையில்



பிரபாகரன் தப்பித்து விடக்கூடாது என்பதற்காக இலட்சக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்றமையே நாம் கூறும் போர்க்குற்றம். அதாவது ஒரு நபரைக் கொலைசெய்ய வேண்டும் என்பதற்காக இலட்சக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்றமை போர்க்குற்றமே."- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் பாதுகாப்பது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அரச தரப்பு எம்.பியும் முன்னாள் அமைச்சருமான மஹிந்த சமரசிங்க அண்மையில் இதே சபையில் பொதுமக்களைப் பாதுகாக்க சர்வதேச நாடுகள் வந்த வேளையில் அதனை அனுமதிக்க முடியாது என மஹிந்த ராஜபக்ச கூறினார் எனவும், பிரபாகரன் தப்பித்து விடுவார் என்ற காரணத்துக்காகத் தமிழ் மக்களை வெளியேற்ற இடமளிக்க முடியாது என்று கூறினார் எனவும் தெரிவித்திருந்தார். இதுதான் போர்க்குற்றம். ஒரு நபரைக் கொலைசெய்ய வேண்டும் என்பதற்காக இலட்சக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்றமை போர்க்குற்றமே.

வன்னியில் இறுதிப்போர் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் விடுதலைப்புலிகளின் அரசியல் தலைவர்களான நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோரைச் சந்தித்தேன். விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்த பொதுமக்களை மீட்க நடவடிக்கை எடுக்க அவர்கள் வலியுறுத்தினர். மக்களை வெளியேற்றி பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் இருந்தனர். அப்போதைய அமைச்சர் பஸில் ராஜபக்சவுடன் நான் பத்து தடவைகளுக்கும் மேல் இது குறித்து பேசினேன். மக்களை எவ்வாறு மீட்பது என்பது குறித்து பேசினோம். கடல் மார்க்கமாக அவர்களை மறு பக்கம் கொண்டுவர வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அப்போது நாட்டில் இல்லாத காரணத்தால் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்தநிலையில், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சகல பொதுமக்களையும் மீட்டுள்ளதாகவும், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் எந்தவொரு பொதுமகனும் இல்லை எனவும் தொலைக்கட்சியில் அறிவிப்பு விடப்பட்டது. அதனைக்

(தொடர்ச்சி 10 பக்கம்)




# விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை

சிவா பரமேஸ்வரன் - மூத்த செய்தியாளர்

உலகளவில் சில அடிப்படை உரிமைகள் மறுக்க முடியாதவை. அவற்றில் மதவுரிமையும் கருத்துரிமையும் மிகவும் முக்கியமானதாகும்.

அடுத்தவர்களின் மனதைப் புண்படுத்தாத வகையிலும், ஆதாரங்களின்றி குற்றச்சாட்டுகளைக் கூறாத வரையிலும் அனைவருக்கும் கருத்துச் சுதந்திர உரிமை உள்ளது என்பது அநேகமாக அனைத்து நாடுகளுக்கும் பொருந்தும்.

அதே போலத்தான் மதச் சுதந்திரமும். ஒவ்வொரு நபருக்கும் தான் விரும்பும் மதத்தை ஏற்பதும் அதன் அடிப்படையில் தமது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லவும் உரிமை உள்ளது. அது அடிப்படை உரிமைகளில் ஒரு பகுதியும் ஆகும்.

சமூகத்துக்கு கேடு விளைவிக்காத வகையில் யாவரும் தமது மத உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சடங்குகளை அனுசரிப்பதை எந்த நாகரீகமான நாடும் தடுக்காது, அதைத் தடுக்கவும் முடியாது.



அப்படியான மதச் சடங்குகளில் முக்கியமான ஒன்று இறந்தவர்களை நினைவு கூர்ந்து அவரவர் மத வழக்கத்தின்படி அதைக் கடைப்பிடிப்பது இயல்பான ஒன்று.

நீத்தார் நினைவு கூர்தல்-தமிழர் பண்பாட்டின் முக்கிய அம்சங்களில் ஒன்று.

இலங்கையின் உள்நாட்டுப் போர் நடைபெற்ற காலத்தில் ஆயிரக்கணக்கானார்கள் உயிரிழந்தனர் அல்லது கொல்லப்பட்டனர். மரணமடைந்தவர்கள் எவ்வகையில் உயிரிழந்தார்கள் என்பது அந்தச் சம்பவத்துடன் முற்றுப் பெறுகிறது. அதன் பிறகு அவர்களது குடும்பத்தாருக்கு மரணமடைந்தவருக்கு செய்ய வேண்டியவற்றைச் செய்யும் கடமையும் உரிமையும் உள்ளன.

அதைத் தடுக்க யாருக்கும் உரிமை இல்லை. போர்க் காலத்தில் உயிரிழந்தவர்களை குடும்பத்தார் நினைவு கூர்வதற்கு விதிக்கப்பட்ட தடைகள் ஏற்புடையதாக இல்லை.

ஆனால் அரசியல் கட்சிகள் அந்த நிகழ்வை தமது சுயலாப அரசியலுக்கு பயன்படுத்த முயற்சிக்கும் போது அது நினைவுநாள் அனுசரிப்பு என்பதிலிருந்து மாறி வேறு திசையில் செல்கிறது.

விடுதலைப் புலிகள் தமது அமைப்பில் இணைந்து செயல்பட்டு உயிரிழந்தவர்களின் நினைவாக ஹமாவீரர் நாள்ஹ எனும் முன்னெடுப்பைச் செய்து அதை பல ஆண்டுகளாக தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் அனுசரித்து வந்தனர்.

தனி ஈழம் அமைய வேண்டும் எனும் இலட்சியத்துடன் பல போராளிக் குழுக்கள் ஆயுதமேந்தி இலங்கை அரசுக்கு எதிராகப் போராடிய போது அனைத்துக் குழுக்களிலிருந்தும் பலர் உயிர்த் தியாகம் செய்தனர். அவ்வகையில் அவர்களும் மாவீரர்களாகவே அவர்களின் குடும்பத்தாராலும் அவர்களைச் சார்ந்தவர்களாலும் கருதப்படுவர்.

ஒரு நோக்கத்துக்காகப் பல காலகட்டத்தில் உயிரிழந்தவர்களை அவர்களின் நினைவு நாளிலோ அல்லது பொதுவாக ஒரு நாளிலோ நினைவு கூர்வது உலகளவில் அனுசரிக்கப்படும் ஒரு நிகழ்வாகும்.




உதாரணமாக ஐரோப்பாவில் உலக யுத்தங்களில் உயிரிழந்தவர்களை ஒரு பொது நாளில் நினைவு கூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி மரியாதை செய்வது நடைமுறையில் உள்ளது.

பிரிட்டனில் அண்டு தோறும் அவ்வகையில் பொப்பி தினம் என்று அனுசரிக்கப்படுகிறது. அன்று பிரிட்டிஷ் அரசி தொடங்கி சாமானியர்கள் வரை அந்த அஞ்சலி நிகழ்வில் பங்குபெறுகின்றனர்.

ஆனால் பிரிட்டனில் இது அரசியல் படுத்தப்படுவதில்லை. ஆனால் துரதிஷ்டவசமாக இலங்கையில் இது அரசியலாக்கப்படுகிறது என்பது கசப்பான உண்மை. அவ்வகையில் தமிழ்க் கட்சிகள் அதைக் தமது கைகளில் எடுக்கும் போது அதற்கு எதிர்வினையாக இலங்கை அரசும் தென்னிலங்கை கட்சிகளும் களத்தில் இறங்குவது இயற்கையே.

தமிழ் அரசியல் கட்சிகளை எதிர்ப்பதாகக் கருதிக் கொண்டு உயிரிழந்தவர்களை நினைவு கூர்வதில் குடும்பத்தாருக்கும் இருக்கும் உரிமையை அரசியலுக்காக இலங்கை அரசு மறுப்பது அப்பட்டமான ஜனநாயக விரோதச் செயலாகவே கருதப்படும்.

அந்த நினைவு கூர்தல் நிகழ்ச்சியில் பொது அமைதியைக் குலைக்கும் வகையிலோ, நாட்டின் அரசியல் யாப்புக்கு முரணான வகையிலோ யாராவது நடந்து கொண்டனர் என்று அரசு கருதினால் அதை உரிய வகையில் பதிவு செய்து அப்படியான செயலில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுபவர்களை நீதிமன்றத்தில் நிறுத்துவதே சரியான நடவடிக்கையாக இருக்கும்.



உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்துவிட்டது, விடுதலைப் புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டுவிட்டது என்று கூறும் இலங்கை அரசு, "மாவீரர் நாள்" என்றழைக்கப்படும் நினைவேந்தல் நிகழ்ச்சியைக் கண்டு ஏன் அஞ்சுகிறது அல்லது கலக்கமடைகிறது?

தனி நாட்டுக் கோரிக்கைக்காக மீண்டும் ஒரு போர் ஏற்படும் சாத்தியங்கள் யதார்த்த ரீதியில் இல்லை. விடுதலைப் புலிகளைப் போன்று வலிமை வாய்ந்த ஒரு கட்டமைப்பு மீண்டும் உருவாகவும் வாய்ப்பில்லை.

அதேவேளை புலம் பெயர்ந்த நாடுகளில் வசிக்கும் தமிழர்களும் "மாவீரர் நாள்" நிகழ்வை தமது சுயலாபத்துக்காகப் பயன்படுத்துகின்றனர் எனும் விமர்சனங்களையும் முழுமையாகப் புறந்தள்ள முடியாது.

தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தொடங்கி தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் தமிழ் கட்சிகள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வெற்றி அவர்களுக்கு மக்களிடையே ஆதரவு இல்லாததை தோலுரித்துக் காட்டியது. எனவே அவர்கள் தொடர்ச்சியாக "மாவீரர் நாள்" நிகழ்ச்சியை தமது அரசியல் இலாபத்துக்கு பயன்படுத்தினர் என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழ் மக்களைவிட தமிழ் அரசியல் கட்சிகள் மீதே இலங்கை அரசு கூடுதல் வெறுப்புணர்வைக் கொண்டுள்ளது என்பது யதார்த்தம். இலங்கை அரசின் கடும்போக்கு நிலைப்பாடுக்கு இந்த தமிழ் அரசியல் கட்சிகளின் செயல்பாடு முக்கியமானதொரு காரணம்.




அதேவேளை போரில் உயிரிழந்த சிங்கள இராணுவ வீரர்களைப் போற்றும் வகையில் போர் வெற்றி தினத்தை அனுசரிக்கும் போது அதே உரிமை ஏன் தமிழ் மக்களுக்கு மறுக்கப்படுகிறது என்பதற்கு இலங்கை நீதிமன்றங்கள் இந்நாள் வரை விடையளிக்கவில்லை.

இலங்கை அரசு மிகவும் கண்ணியமாகவும் மனித நேயத்துடனும் இந்த விஷயத்தை அணுகியிருக்க வேண்டும். உண்மையைச் சொல்வதானால் இலங்கை அரசே "மாவீரர்களை" அதிகளவில் நினைவில் வைத்துள்ளது.

அரசு பெருந்தன்மையுடன் போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்வதற்கு தடை ஏற்படுத்தாமல் இருந்திருந்தால், அந்த நிகழ்வு பெரும் ஆரவாரமின்றி அமைதியாக நடந்திருக்கும். குறிப்பிட்ட ஒரு நேரத்தில் மக்கள் ஒன்றுகூடி போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து விளக்கேற்றி அஞ்சலி செலுத்தி அமைதியான முறையில் கலைந்து சென்றிருப்பார்கள். ஆனால் அந்த நல்லெண்ணத்தை வெளிப்படுத்த இலங்கை அரசு ஏன் தயங்க வேண்டும்?

அதேபோல் தமிழ் அரசியல் கட்சிகளும் வாக்கு வங்கி அரசியலுக்காக தமிழ் மக்களைப் பகடைக் காயாகப் பயன்படுத்துவதையும் நிறுத்த வேண்டும். யூகத்தின் அடிப்படையில் அரசி நீதிமன்றத்தை அணுகுவதும், அதை ஏற்று நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளை வழங்குவதும் கேள்விக்குள்ளாகவேச் செய்யும்.

இந்த ஆண்டு கோவிட்-19 தொற்றை மேற்கோள் காட்டி மக்கள் ஒன்று கூடுவதை தவிர்க்கும் நோக்கில் அரசு நீதிமன்றங்களில் "மாவீரர் நாள்" ஒன்றுகூடலுக்கு தடை உத்தரவு பெற்றுள்ளது.

அப்படியானால் அடுத்த ஆண்டு கொரோனா தொற்று முற்றாக முடிவுக்கு வந்திருந்தால் இலங்கை அரசு தமிழ் மக்கள் ஒன்றுகூடி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிக்கு தடை கோராமல் இருக்குமா?

இலங்கையில் உண்மையான இன ஒற்றுமையும், சகவாழ்வும் ஏற்பட வேண்டுமென்றால், விட்டுக்கொடுப்பு மிகவும் அவசியம். பின்னால் பார்த்துக் கொண்டேயிருந்தால் முன்னால் இருப்பது தெரியாது என்பதை இரு தரப்பும் உணர்ந்தால் மட்டுமே நல்லிணக்கம் ஏற்படும்.



ஆனால் நல்லிணக்கத்திற்கான முன்னெடுப்பைச் செய்ய வேண்டிய பொறுப்பு பெரும்பான்மை மக்களிடமே உள்ளது. அவர்களே சிறுபான்மை மக்களை அணைத்துச் செல்ல வேண்டியவர்கள். அதேவேளை சிறுபான்மை மக்களும் கசப்புணர்வுகளை மறந்து பெரும்பான்மை மக்களுடன் இணைந்து வாழ்வதே தங்களுக்கு நலன் பயக்கும் எனும் யதார்த்தத்தை உணர வேண்டும்.

முன் கை நீண்டால் தான் முழங்கை நீளும் என்பதை இலங்கை அரசு உணர்ந்து செயல்பட வேண்டும். அதுவே நாட்டுக்கு நல்லது.





# தாய் மண்ணின் விளையாட்டுத்துறையின் பெரும் வளர்ச்சிக்கு ஒளியூட்டிய பத்மநாதன் காலமானார்





எமது தாய் மண்ணில் அமைந்துள்ள, யாழ், பல்கலைக்கழகத்தின் முன்னாள் உடற்கல்வி ஆசிரியரும் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவருமான பத்மநாதன் அவர்கள் காலமானார் என்ற செய்தியை எமது வாசக அன்பர்களுக்கு கவலையுடன் அறியத்தருகின்றோம்.

காலமான பத்மநாதன் அவர்கள் விடுதலைப் புலிகளின் காலத்தில் அவர்களின் நிர்வாகத்தில் கீழ் இயங்கிய தமிழீழ விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்காய் பெரும்பங்கு செய்தவர். இந்தநிலையில் அவரின் மறைவுக்கு பலரும் இரங்கலை தெரிவித்து வருகின்றன. இவர் மாவீரர் கப்டன் கெனடி/பாவாணன் அவர்களின் தந்தையும் என்ற பெருமைக்குரியவர். *நன்றி - "தாரகம்" இணையத்தளம்*

## மட்டக்களப்பில் ஊடகவியலாளர் ஒருவர் கைது!



மட்டக்களப்பு - வாழைச்சேனையில் ஊடகவியலாளர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோகுலதாசன் என்ற ஊடகவியலாளர் அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்ட அவரை 3 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்கும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

முகநூலில் விடுதலைப் புலிகளின் தலைவரின் படத்தை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## கடல் அலையில் அகப்பட்ட ஒருவர் சடலமாக மீட்பு!



யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை கடலில் குளித்த போது, அலையில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போன ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது. காங்கேசன்துறை தல்செவன இராணுவ நட்சத்திர விடுதிக்கு அருகாமையில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் கடலில் குளித்துக் கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் அலையில் அடித்துச் செல்லப்பட்டனர்.

தையிட்டியைச் சேர்ந்த சிவச்சந்திரன் நிரோஜன் (வயது -19), மாசிலாமணி தவச்செல்வம் (வயது -19) ஆகிய இருவருமே கடலலையில் அடித்துச் செல்லப்பட்டனர். அவர்களில் சிவச்சந்திரன் நிரோஜன் என்பவர் நேற்று மாலை 5 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

MONEY PROBLEMS?™
ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

உங்களைக் கேளுங்கள்?



- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்



Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
| --- | --- | --- | --- | --- |
| 201-4433 Sheppard Ave. E Scarborough, ON, M1S 1V3 | 800-120 Eglinton Ave. E Toronto, ON, M4P 1E2 | 306-1280 Finch Ave. W North York, ON, M3J 3K6 | 110-93 Dundas Street E. Mississauga, ON, L5A 1W7 | 201-7990 Kennedy Rd. South, Brampton, Ontario, L6W 0B3 |

Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor

# அமைச்சர் டக்ளஸின் முயற்சிக்கு இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் பாராட்டு



தேசிய நல்லிணக்கம் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கு அமெரிக்கா பூரண ஒத்துழைப்பை வழங்குமென்றும் கடற்றொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் (Alaina B. Teplitz) அலெய்னா பி ரெப்லிட்ஸ் உறுதியளித்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கடந்த செவ்வாய்க்கிழமையன்று மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

காலநிலை மாற்றத்திற்கேற்ப உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கை அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளது. இந் நிலையில், இந்த அபிவிருத்தி திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டிய கடற்றொழில் சார் விடயங்கள் தொடர்பாக அறிந்து கொள்வதே இன்றைய சந்திப்பின் பிரதான நோக்கமாக அமைந்திருந்திருந்தது.

இதன்போது, இலங்கையின் வரவு - செலவுத் திட்டத்தில் மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை, குருநகர், - பேசாலை போன்ற மீன்பிடித் துறைமுகங்களையும் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீர் வேளாண்மையை விருத்தி செய்வதிலும் ஆர்வம் செலுத்தி வருவதாக தெரிவித்தார். அத்துடன் துறைசார் அதிகாரிகளுடன் கலந்தரையாடி காலநிலை மாற்றம் தொடர்பான அபிவிருத்தித் திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான முன்மொழிவை வழங்குவதாகவும் தெரிவித்தார். இக் கலந்துரையாடலின் போது, கடற்றொழில் செயற்பாடுகளில் காணப்படும் சவால்கள், கடற்றொழிலாளர்களின் வாழ்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் இலங்கையின் தற்போதைய நிலைரங்கள் தொடர்பாகவும் அமெரிக்க தூதுவர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடினார்.

# ஒன்றாரியோ கன்சர்வேட்டிவ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஸ்கார்பரோ குடும்பங்களை நிர்க்கதியாக்கி விட்டனர் என்கிறது என்டிபி

ஒன்றாரியோவில் ஆட்சியில் உள்ள கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் ஸ்கார்பரோவில் பல தொகுதிகளை பிரதிநிதித்துவம் செய்யும் பமாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள், கோவிட்-19 ஐ எதிர்த்துப் போராடவல்ல முதலீடுகளை செய்யும்படி டக் ஃபோர்டைக் கேட்பதற்கு முன்வரவில்லை. அதை மறுக்கின்றார்கள்.

பேரிடரின் கோரப்பிடியில் சிக்கித் தவித்து நிற்கும் தம் சமூகத்தினர்க்கு உங்கள் அரசாங்கத்தின் ஆதரவு தேவை என்றும், கட்சி விசுவாசத்தை ஒரு புறம் வைத்துவிட்டு அவர்களுடன் ஒன்றாகச் சேர்ந்து நில்லுங்கள்".

இவ்வாறு என் டி பி கட்சியின் ஸ்கார்பரோ தெற்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் டொலி பேகம், ஸ்கார்பரோவிலுள்ள ஆளும் கட்சி மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அவர் மேற்படி கடிதத்தில் என் டி பி எம்பிக்கள் எண்ணற்ற சுகாதார வல்லுனர்கள், சிறு வணிக உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், மற்றும் தினசரி ஒன்றாரியோவாசிகள் ஆகியோரின் உணர்வுகளை பிரதிபலித்து, இவர்கள் கேட்கும் கீழே குறிப்பிட்டுள்ள விடயங்களை உடனடியாக அளித்து, வெற்றிகரமான முடக்குதலை உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும் என்று டக் ஃபோர்டைக் கேட்டுள்ளனர்.



"ஒன்றாரியோ மாகாண மக்கள் ஒவ்வொருவருக்கும் சம்பளத்துடன் கூடிய சுகயீன விடுப்பை உத்தரவாதம் செய்தல். இதன் மூலம், சுகயீனமுற்றோர் ஊதிய இழப்பைப் பற்றிக் கவலை கொள்ளாமல் சுகயீனமுற்ற நாட்களில் வீட்டில் தங்கலாம்.

கோவிட்-19 சோதனைகள் மற்றும் தொடர்புத் தடயங்கள் செய்வதை துரிதப்படுத்தி, அவ்வசதிகளை எல்லோரும் எளிதில் பயன்படுத்தக் கூடியதாக மாற்றுவதற்காக உள்ளூர் மருத்துவ மனைகள், பொது சுகாதாரம் மற்றும் தங்குமிட கட்டமைப்பு ஆகியவற்றுக்கான முதலீடுகளைக் கணிசமான அளவில் அதிகரித்து, கோவிட்-19 இன் தீவிரத்தைக் கையாள எமது சுகாதார அமைப்பிற்கு உதவுவதற்கும், இந்தப் பேரிடர் குளிர் காலத்தில் அனைவரும் பாதுகாப்பாக தங்குவதற்கும் உத்திரவாதம் அளிக்க வேண்டும்.

- சிறு வணிகங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்வதற்குத் தேவையான நேரடியான, ஸ்திரமான நிதி உதவியுடன், அவர்களின் வணிக வாடகை மற்றும் ஊழியர்களுக்கான சம்பளம் தொடர்பான செலவுகள் போன்ற உதவிகளையும் செய்ய வேண்டும்.
- பேரிடர் காலம் முடியும் வரை வணிக மற்றும் ஏனைய குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்படுதலை தடுப்பதற்காக, தடையுத்தரவு ஒன்றைத் தீவிரமாக அமுல்படுத்த வேண்டும்.
- மணிக்கு கூ5.00 என்னும் நிரந்தர ஊதிய உயர்வுடன் குறைந்த பட்சம் 10,000 முன்னணி பி.எஸ். டபிள்யூக்களைப் பணியமர்த்தக் கூடிய துரித ஆட்சேர்ப்புத்திட்டம்.
- பேரிடர் காலகட்டத்தின் போது, அத்தியாவசியப் பணியாளர்கள் அனைவருக்கும், பேரிடர் கால ஊதியத்தை மாகாணம் பூராவும் மீளக் கொடுத்தலைக் கட்டாயமாக்குதல்.

கிறிஸ்டீனா மரியா மிடாஸ்(ஸ்கார்பரோ மத்தி), விஜே தணிகாசலம் (ஸ்கார்பரோ- ரூஜ் பார்க்), ஏரிஸ் பபீகியன் (ஸ்கார்பரோ- ஆஜின்கோட்) மற்றும் கௌரவ. ரேமண்ட் சோ (ஸ்கார்பரோ வடக்கு) ஆகிய எல்லோருக்கும் கடிதம் கிடைத்துள்ளது. ஆயினும், இவர்களில் ஒருவரும் பதிலளிக்காதது மட்டுமன்றி, கோவிட்-19 காலத்தில் ஸ்கார்பரோ மக்களுக்கு ஆதரவளிக்கக் கூடிய எந்தவொரு உறுதியான நடவடிக்கையையும் எடுக்கவில்லை.



இதற்கு மாறாக, இவர்கள் எல்லோரும், டக் போர்ட் வைத்திருக்கும் 9.3 பில்லியன் டாலர்கள் ஒதுக்கப்படாத பேரிடர் ஆதரவு நிதியை முதலீடு செய்யும்படி அவரிடம் கோர மறுத்துள்ளனர். இதன் விளைவாக, குடும்பங்களும், சிறு வணிகங்களும் முடக்குதல் என்னும் சூறாவளிக்கும், கோவிட்-19 பேரிடருக்கும் எதிராகத் தனித்து நின்று போராடுகின்றனர். இது அவர்களின் எதிர்காலத்தை பாதிக்கும் ஒன்றாகும்.

இவ்வாறு அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

# ஒளி உமிழ்வை ஒளியணுவாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வரும் இந்திய விஞ்ஞானி



குவாண்டம் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக ஒளி உமிழ்வை ஒற்றை துகளான ஒளியணுவாக மாற்றும் முயற்சியில் விஞ்ஞானிகள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். அறிவியல் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் ஸ்வர்ண ஜெயந்தி ஃபெல்லோ திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரோபார் இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் இயற்பியியல் துறை இணைப் பேராசிரியர் டாக்டர் ராஜேஷ் வி. நாயர் இந்த முயற்சியில் ஓரளவு வெற்றி அடைந்துள்ளார். இவர் இந்தாண்டு ஸ்வர்ண ஜெயந்தி கல்வி உதவித் தொகையைப் பெற்றவர்.


Toronto சிட்டி கவுன்சிலர்



PAUL AINSLIE

WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

HELP IS AVAILABLE

வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| குறைந்த கட்டணத்தில் வீட்டுவசதி | Ontario Works |
| விலங்கு சேவைகள் | வாகனத் தரிப்பிடங்கள் |
| உயர்மாடி கட்டட சட்டங்கள் | பூங்காக்கள் |
| கட்டட அனுமதி பத்திரங்கள் | காவல் துறை |
| பிள்ளை பராமரிப்பு சலுகை | பொதுச் சுகாதாரம் |
| அவசர வீட்டு வசதிகள் | வீதிகள் |
| தீயணைப்பு சேவைகள் | ஆதன வரிகள் |
| கழிவுப் பொருட்கள் சேவை | பொதுப் போக்குவரத்து |
| நூலகச் சேவை | மீள் சுலட்சியும் பசுமை திட்டமும் |
| மாநகரத் தேர்தல் | மரங்கள் |
| மாநகர அனுமதியும் சட்டங்களும் | நீர் விநியோகம் |

| நியமன அலுவலகம் | ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம் |
|---|---|
| Scarborough Civic Centre | 100 Queen Street West, |
| 150 Borough Drive, 2nd Floor | 2nd Floor - Suite C52 |
| Scarborough, ON M1P 4N7 | Toronto, ON M5H 2N2 |
| Phone: 416-396-7222 | Phone: 416-392-4008 |
| Fax: 416-392-4006 | Fax: 416-392-4006 |

councillor_ainslie@toronto.ca www.paulainslie.com

Ward 24 Scarborough-Guildwood @Ainslie_Ward24

@cllrainslie Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

# "நோய்த் தொற்று அதிகரிப்பது சமூக ஒன்றுகூடல்களிலிருந்தே ஒழிய திறந்திருக்கும் பாடசாலைகளிலிருந்தல்ல"

## ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு



கனடாவில் ஒன்றாரியோ மாகாணத்தில் தான் அதிகளவு பாடசாலைகள் மீளவும் திறக்கப்பட்டு சுமார் 5000 பாடசாலைகளில் மாணவர்கள் நேரடியாக பாடசாலைகளுக்கு வந்து தங்கள் கற்றலைத் தொடருகின்றார்கள். அதற்காக எமது அரசு பல பாதுகாப்பு மற்றும் சுகாதார ஏற்பாடுகளை செய்திருக்கின்றது. இதற்காக பெருமளவில் பணம் செலவளிக்கப்பட்டு வருகின்றது.

தற்போது எமது மாகாணத்தில் சிறு சிறு நோய்த் தொற்று காரணமாக 6 பாடசாலைகள் மாத்திரமே மூடப்பட்டுள்ளன. எஞ்சியவை எந்த விதமான பிரச்சனைகளும் இன்றி இயங்கிவருகின்றன. மாணவர்கள் வீட்டிலிருந்து கற்பதிலும் பார்க்க, பாடசாலைகளுக்கு நேரடியாக வந்து ஆசிரியர்களின் கட்டுப்பாட்டிலும் தாதிமார்களின் கண்காணிப்பிலும் இருப்பதால் அதை பெற்றோர்கள் கூடுதலாக விரும்புகின்றார்கள். வீட்டில் பெற்றோர் பணிகளுக்குச் செல்லும் போது பிள்ளைகள் தனியாக இருந்து இணையவழி ஊடான கல்வியைத் தொடர்வது பெற்றோர்கள் பெரிதும் விரும்பியதாகத் தெரியவில்லை.



ஏனென்றால் வீட்டில் அவர்களை மேற்பார்வை செய்வதற்கு எவருமே இருப்பதில்லை. எனவே அவர்கள் சுகதார விதிகளை கடைப்பிடிக்கின்றார்களா என்பதை கவனிப்பதற்கும் ஆட்கள் வீடுகளில் இல்லை. ஆனால் பாடசாலைகளில் மாணவர்களை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பானவர் உள்ளார்கள். எனவே எமது திட்டத்தை குறை சொல்லுகின்றவர்கள் அதை நிறுத்தப் போவதில்லை. நாம் எமது பணிகளில் அக்கறையாகவும் கவனமாகவும் ஈடுபட்டு வருகின்றோம்" இவ்வாறு தெரிவித்தார், கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் கௌரவ ஸ்டீபன் லெசி அவர்கள்.

கடந்த வாரம் கனடாவின் ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக்போர்ட் அவர்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் நலன்களைக் மேலும் உறுதி செய்யும் முகமாக மேலும் 50 மில்லியன் கனடிய டாலர்களை ஒதுக்கியிருந்தார். இந்த ஒதுக்கீடு தொடர்பாகவும். தற்போது பாடசாலைகளில் வகுப்பறைகளிலிருந்து கல்வி கற்றுவரும் மாணவர்கள் மற்றும் ஆசியர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதார நடைமுறைகள் ஆகியவை தொடர்பாகவும் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள பல்மொழி சார்ந்த பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் ஆசிரியர்களோடு கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்காக நடத்தப்பெற்ற இணையவழி சந்திப்பின்போதே அமைச்சர் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கலந்து கொண்டார். பல மொழிகளைப் பேசும் மக்கள் சார்ந்த பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் செய்தி ஆசிரியர்கள் ஆகியோர் அங்கு மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். மேற்படி சந்திப்பின் போது முதலில் உரையாற்றிய அமைச்சர் அவர்கள் தனக்கு பல்லின பத்திரிகைகளின் மீது மிகுந்த நம்பிக்கை இருக்கின்றது என்று கூறி எமது மாகாணத்தில் நாம் ஆங்கிலத்திலோ அன்றி பிரன்சு மொழியிலோ தெரிவிக்கின்ற பயனுள்ள விடயங்களை பல்லின பத்திரிகையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்கள் மொழியில் தங்கள் பத்திரிகைகள் ஊடாக தமது இன மக்களிடத்தில் கொண்டு செல்வது பாராட்டுக்குரியது என்றார்.

தொடர்ந்து அங்கு ஒரு கேள்வியோடு வந்த பஞ்சாபி மொழி பத்திரிகையாளர் ஒருவர் மாகாணத்தில் எதிர்க்கட்சியாக விளங்கும் என்டிபியின் தலைவர் அவர்கள் விடுத்துள்ள ஒரு செய்தி தொடர்பாக வினாவினார். அதில் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் மீளவும் திறக்கட்டாலும் அங்கு சுகாதாரச் சீர்கேடுகளும் நிதி விரயமும் ஏற்படுவதாகக் கூறியுள்ளாரே, அதற்கு உங்களின் பதில் என்ன என்று அமைச்சரிடம் கேட்டார். அதற்கு சற்று உணர்ச்சிவசப்பட்டவராக பதிலளித்த அமைச்சர் அவர்கள் பின்வருமாறு கூறினார்.

எமது திட்டங்களை விமர்சனம் செய்பவர்கள் தகுந்த ஆதாரங்கள் இல்லாமலே குற்றச்சாட்டுக்களை கொண்டுவருகின்றார்கள். எமது மாகாணத்தில் பாடசாலைகளை நாம் மீளவும் திறந்து நடத்தும் திட்டமானது எமது தேசத்தில் ஒரு மிகச் சிறந்த திட்டமாகவே பேசப்படுகின்றது. கனடாவில் உள்ள நான்கு மாகாணங்கள் எமது திட்டங்களைப் பின்பற்றத் தொடங்கியுள்ளன. இது எதனைக் காட்டுகின்றது என்பதை விமர்சனம் செய்பவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

எம்மைப் பொறுத்தளவில் எமது பாடாசாலையில் வகுப்பறைக் கல்வியை தொடரும் திட்டத்தில் 90 வீதம் கோவிட்-19 பரவலோ அன்றி அச்சுறுத்தலோ இல்லை. எஞ்சிய 10 வீதமான பிரச்சனைகள் அல்லது சவால்கள் உள்ளன என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். மேலும் நோய்த் தொற்று இதுவரை பாடசாலைகளிலிருந்து ஆரம்பிக்கின்றது என்ற எந்தவிதமாக குற்றச்சாட்டும் சுகாதாரத்திணைக்களத்திற்கு கிடைக்கவில்லை. ஆனால் அதிகமான நோய்த் தொற்றானது, சமூக ஒன்றுகூடல்களிலிருந்தே பரவுகின்றன. அதை நாம் செய்திகள் ஊடாக அறிந்து வருகின்றோம். அண்மையில் பல சமூக நிகழ்வுகளின் கட்டுப்பாடுகளை மீறுகின்றவர்களுக்கு அதிகளவு தண்டப்பணம் விதித்ததை பத்திரிகையாளர்களான நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அதற்காகத்தானே நாம் மாகாணத்தின் பாடசாலைகளில் ஏற்படும் சுகாதாரப் பிரச்சனைகள் மற்றும் பாதுகாப்பு பிரச்சனைகளுக்காக 600 மருத்துவத் தாதிகளையும் ஏனைய அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களையும் நியமித்துள்ளோம்", என்றார்.

தொடர்ந்து அமைச்சர் உரையாற்றுகையில் எமது மாகண அரசாங்கமானது, பாடசாலைகளை திறந்து மாணவர்களை வகுப்பறைக் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியிருப்பதை கவனிக்காமல இருக்கவில்லை. எமது அரசாங்கத்தினதும் கல்விச்சபைகளினதும் கண்காணிப்பு தொடர்ந்து உள்ளது. பெற்றோர்களினதும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் பாதுகாப்பையும் உடல் நலத்தையும் கவனிக்க வேண்டியது எமது பொறுப்பு என்பதை நான் நன்கு உணர்கின்றேன். அதற்காக பெற்றோர்களுக்கு கொடுப்பனவு ஒன்றையும் வழங்குவதற்கு எமது அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மேலும் அதற்கா விண்ணப்பங்கள் இணையவழி மூலம் அனுப்பலாம். பெற்றோர்களின் நிதித்தேவைகளையும் நாம் கவனிக்க தயாரா உள்ளோம் என்றார்.

# இந்தியாவில் விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த கனடிய பிரதமர் ட்ரூடோ



இந்திய அரசு கொண்டுவந்த வேளாண் சட்டத்துக்கு எதிராகப் போராடி வரும் விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ள கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, உரிமைகளுக்காக அமைதியான முறையில் போராடும் இந்திய விவசாயிகளுக்கு கனடா எப்போதும் ஆதரவாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார். மத்திய அரசு கொண்டு வந்துள்ள வேளாண் சட்டங்களுக்கு எதிராக டெல்லி சலோ என்ற பெயரில் ஹரியாணா, பஞ்சாப் மாநிலங்கள் உள்பட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்கங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள் டெல்லியில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

6-வது நாளாக தொடரும் விவசாயிகள் போராட்டத்தால், டெல்லி எல்லைப் பகுதியில் போக்குவரத்து முடங்கியுள்ளது.

பேச்சுவார்த்தைக்கு மத்திய அரசு அழைத்தபோதிலும், நிபந்தனையற்ற பேச்சுக்கு வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். விவசாயிகளின் போராட்டம் உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. மத்திய அரசின் பேச்சுவாரத்தைக்குச் செல்வது குறித்து இன்று முடிவு எடுப்பதாக விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கனடாவின் டொராண்டோ நகரில் இந்தியர்கள் சார்பில் நடத்தப்பட்ட, சீக்கிய குரு, குரு நானக் தேவின் 551-வது பிறந்தநாள் விழாவில் அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ காணொலி மூலம் நேற்று முன்தினம் புதன்கிழமை பங்கேற்றார். அப்போது ஜஸ்டின் பேசியதாவது: "இந்தியாவில் விவசாயிகள் நடத்திவரும் போராட்டம் குறித்த செய்தியை நான் அங்கீகரிக்காமல் இருந்தால், நான் பொறுப்பற்றவனாகிவிடுவேன். விவசாயிகள் போராட்டத்தை நினைத்து கவலைப்படுகிறேன். விவசாயிகளின் குடும்பத்தார், அவர்களின் நண்பர்கள் குறித்து நான் வேதனைப்படுகிறேன்.



பெரும்பாலன விவசாயிகளின் உண்மையான நிலை இதுதான் என்பது எனக்குத் தெரியும். நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன், உரிமைகளுக்காக நீங்கள் அமைதியாகப் போராடும் போது, அதற்கு கனடா எப்போதும் துணை நிற்கும். பேச்சுவார்த்தையின் முக்கியத்துவத்தை நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம்.

அதனால்தான் பலவழிகள் மூலம் உங்கள் கவலைகளை இந்திய அதிகாரிகளுக்கு நாங்கள் தெரிவிக்கிறோம். கரோனா மற்றும் மற்ற எல்லாவற்றின் காரணமாக நாம் அனைவரும் இந்த ஆண்டில் ஒன்றாக இருக்க வேண்டிய தருணம். இந்த ஆண்டில் நாம் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டிய முக்கியமான நேரம் இதுதான். ஏனென்றால், கரோனா அனைவரையும் பிரித்துவிட்டது. அனைவரும் ஒன்றாக இணைந்து, இந்த குரு நானக் பிறந்தநாளைக் கொண்டாடுவோம்" எனத் தெரிவித்தார்.

# புதிய அரசியலமைப்பு வரைபு உருவாக்கத்திற்கு தமிழ் கட்சிகளால் ஐவர் கொண்டு குழு அமைப்பு

புதிய அரசியலமைப்பு வரைபை உருவாக்க ஐந்து பேர் கொண்ட குழு, தமிழ் தேசியக் கட்சிகளால் அமைக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பிற்கான சிபாரிசுகளை இவ்வருடம் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி அரசாங்கம் கேட்டுள்ளது. இது குறித்து இன்று (செவ்வாய்க்கிழமை) தமிழ் கட்சிகள் விவாதித்தன.



இதன்போது, தமிழ் தேசியக் கட்சிகள் சார்பில் சிபாரிசு வரைவொன்றை சமர்ப்பிப்பதென முடிவாகியுள்ளது.

இதேவேளை, கார்த்திகை தீபத் திருநாளில் வடக்கு மாகாணத்தில் இராணுவம் அடாவடியில் ஈடுபட்டமை தொடர்பாக கண்டனம் வெளியிட்டு அரசாங்கத்துக்கு கடிதம் எழுதுவதாகவும் தமிழ் தேசியக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

தமிழ் தேசியக் கட்சிகளின் கூட்டம் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் இல்லத்தில் இன்று மாலை இடம்பெற்றது.

இலங்கை தமிழ் அரசு கட்சி சார்பில் மாவை சேனாதிராசா, சீ.வீ. கே.சிவஞானம், ஈ.சரவணபவன், புளொட் சார்பில் கஜதீபன், தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் க.அருந்தவபாலன், பேராசிரியர் க.சிவநாதன், ஈ.பி.ஆர். எல்.எவ் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் தேசியக் கட்சி சார்பில் என். சிறிகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ் தேசிய பசுமை இயக்கம் சார்பில் பொ. ஐங்கரநேசன், ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகம் சார்பில் அனந்தி சசிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, கடந்த அரசில் யாப்பு உருவாக்க முயற்சியின் போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்த வரைபு, கடந்த அரசாங்கத்தில் தமிழ் மக்கள் பேரவை சமர்ப்பித்த வரைவு, அத்துடன், வட மாகாண சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட வரைபு ஆகியவற்றின் உள்ளடங்கங்களிலிருந்து மேம்பட்ட புதிய வரைபை உருவாக்குவதென முடிவானது.

இந்த வரைபை உருவாக்க ஐந்து பேர் கொண்ட குழு உருவாக்கப்பட்டது. மாவை சேனாதிராசா தலைமையில் சீ.வீ.கே.சிவஞானம், சுரே' பிரேமச்சந்திரன், எம். கே.சிவாஜிலிங்கம், பேராசிரியர் சிவநாதன் ஆகியோர் யாப்பு வரைபை உருவாக்க குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், எதிர்வரும் 10 நாட்களில் இந்தக் குழு வரைபை இறுதி செய்து, தமிழ் தேசியக் கட்சிகளின் தலைமைகளுக்கு சமர்ப்பிப்பதென முடிவாகியுள்ளது. கட்சித் தலைவர்களின் அங்கீகாரத்தின் பின்னர், அந்த வரைபை மாவை சேனாதிராஜா பிரதமரிடம் கையளிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சி.வி.விக்னேஸ்வரன் தரப்பில் நிபுணர்களை வைத்து ஒரு யாப்பு வரைபை உருவாக்கி வருவதாக, அவரது பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது. இந்த வரைபையும் உள்ளடக்கியதாக, புதிய வரைபைத் தயாரிப்பதென முடிவாகியுள்ளது.

# புரெவி புயலின் வேகத்திற்கு ஏற்ப மீட்பு நடவடிக்கை மேற்கொள்ள போதிய முன்னேற்பாடுகள்: அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தகவல்



புரெவி புயலின் வேகத்திற்கு ஏற்ப மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள போதிய முன்னேற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாக வருவாய்த்துறை அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் தெரிவித்தார். கன்னியாகுமரி மாவட்டத்தில் புரெவி புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கடம்பூர் ராஜீ, தமிழக அரசின் டெல்லி பிரதிநிதி தளவாய் சுந்தரம் ஆகியோர் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்துத்துறை அலுவலர்களுடன் இன்றுஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின்போது அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தெரிவிக்கையில்; புரெவி புயல் கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலைகொண்டிருப்பதை கூர்ந்து கவனித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கும், கட்டுப்பாட்டு அறையின் மூலம் மாவட்ட நிர்வாகமும், மாநில அவசர கட்டுப்பாட்டு அறையும் தயார் நிலையில் உள்ளது.கடந்த ஒரு வாரமாக ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் கரைதிரும்ப வேண்டும் எனவும், யாரும் மீன்பிடிக்க செல்லவேண்டாம் என எச்சரிக்கை விடுத்து அதிகாரிகள் துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.தற்போதைய நிலவரப்படி அனைத்து மீனவர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்றவர்கள் பாதுகாப்பான பகுதியில் கரைஒதுங்க வேண்டும் என வலியுறுத்தி அதை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புரெவி புயலின் வீரியம் குறித்தும் மீனவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. காற்றின் வேகம் 90 கிலோ மீட்டர் வேகம் என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை கடல் பகுதியில் புரெவி புயல் கடந்து, தற்போது பாம்பன், கன்னியாகுமரி இடையே கடக்கக்கூடும் என்ற அறிகுறியின் பேரில் கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுவாக புயல் ஒரே இடத்தில் கடக்கும் என்றால் காற்றழுத்த தாழ்வு மண்டலம் குறையும். ஆனால் கஜா புயல் போன்று புரெவி புயலும் வலுவுடன் இருக்கும் காரணத்தால் மழைப்பொழிவு, காற்று அதன் வேகத்திற்கு ஏற்ப மீட்பு நடவடிக்கையை எடுக்க முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசிடம் இருந்து தேவைப்படும் கடற்படை, விமானப்படை உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்தி தருவதாக தமிழக முதல்வர் பழனிச்சாமியிடம், பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் இருந்து நீர்வரத்து அதிகமாகும்போது உபரிநீரை வெளியேற்றுவதற்கான நிலைப்பாடுகளை பொதுப்பணித்துறை வாயிலாக கண்காணிக்கப்பட்டு மணல் மூட்டைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. புயல் நாளைக்குள் கரையை கடக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே அனைத்து அலுவலர்களும் 24 மணி நேர கட்டுப்பாட்டு அறைகளுடன் தொடர்பில் இருக்கிறார்கள்.

எனவே பொதுமக்களும், மீனவர்களும் அச்சப்பட வேண்டாம்.தாழ்வான பகுதிகள், மற்றும் கடற்கரையோர பகுதிகளில் நிவாரண முகாம்கள் தயார் நிலையில் உள்ளன. புரெவி புயலால் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வருவதை தவிர்க்க வேண்டும் என்றார்.கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பாளரும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு மேலாண்மை இயக்குனருமான ஜோதி நிர்மலாசாமி, மீன்வளத்துறை இயக்குனர் ஜெயகாந்தன், குமரி மாவட்ட ஆட்சியர் மா.அரவிந்த், எஸ்.பி. பத்ரிநாராயணன், மாவட்ட வருவாய் அலுவலர் ரேவதி மற்றும் திரளானோர் கலந்துகொண்டனர்.

# ரஜினி கட்சி அறிவிப்பு; கொங்கு மண்டலத்தில் ரசிகர்கள் கேக் வெட்டி, இனிப்புகள் வழங்கி, பட்டாசு வெடித்துக் கொண்டாட்டம்

நடிகர் ரஜினிகாந்தின் அரசியல் கட்சி குறித்த அறிவிப்புக்கு, அவரது ரசிகர்கள் கோவையில் கேக் வெட்டியும், இனிப்புகள் வழங்கியும், பட்டாசு வெடித்தும் கொண்டாடினர். ரஜினிகாந்த் 234 தொகுதிகளிலும் வெற்றி பெறுவார் என இந்து மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் அர்ஜூன் சம்பத் தெரிவித்தார்.ஜனவரியில் கட்சி தொடங்க உள்ளதாக, நடிகர் ரஜினிகாந்த் வெளியிட்ட அறிவிப்பு, அவரது ரசிகர்கள் வட்டாரத்தில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ரஜினிகாந்தின் அறிவிப்பைத் தொடர்ந்து, கோவை, திருப்பூர், நீலகிரியில் அவரது ரசிகர்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

ரஜினி மக்கள் மன்றத்தின் கோவை மாவட்ட தலைமை அலுவலகம், ஆர்.எஸ்.புரத்தில் அமைந்துள்ளது.ரஜினிகாந்தின் அறிவிப்பை வரவேற்று, ஆர்.எஸ்.புரம் மேற்கு சம்பந்தம் சாலை டி.பி.சாலை சந்திப்பில், மன்றத்தின் மாவட்டப் பொறுப்பாளர் கிருஷ்ணமூர்த்தியின் தலைமையில் மன்ற நிர்வாகிகள், ரசிகர்கள் இன்று (3ம் தேதி) கட்சிக் கொடியுடன் திரண்டு பட்டாசு வெடித்தும், பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர். பெரிய கடைவீதியில் உள்ள மணிகூண்டு அருகேயும் ரஜினி மக்கள் மன்றத்தின் ரசிகர்கள் பட்டாசு வெடித்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர்.இதைத் தொடர்ந்து, கோவை சலீவன் வீதியில் உள்ள, ஸ்ரீ ராகவேந்திரர்



சுவாமி கோவிலில், இன்று மாலை ரஜினி மக்கள் மன்றத்தின் தெற்கு தொகுதி நிர்வாகி சத்தியமூர்த்தி, ரஜினிகாந்தின் தீவிர ஆதரவாளரான இந்து மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் அர்ஜூன் சம்பத், மன்ற நிர்வாகிகள், ரசிகர்கள் ஊர்வலமாகத் திரண்டுவந்து சிறப்பு வழிபாடுகள் செய்தனர். அதைத் தொடர்ந்து அங்கே பட்டாசு வெடித்து, பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர்.திருப்பூர் ஈஸ்வரன் கோவில் பகுதியில் உள்ள ரஜினி ரசிகர் மன்ற அலுவலகப் பகுதியில், ரஜினி மக்கள் மன்ற நிர்வாகிகள், ரசிகர்கள் மன்றத்தின் கொடியோடு இன்று திரண்டு பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும், கேக் வெட்டியும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து, திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் ரசிகர்கள் பட்டாசு வெடித்துக் கொண்டாடினர்.நீலகிரி மாவட்டம் உதகையில், காபி ஹவுஸ் சதுக்கத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் எஸ்.குமார் தலைமை வகித்தார். நடிகர் கராத்தே ராஜா முன்னிலை வகித்தார். ரசிகர்கள் மழையும் பொருட்படுத்தாமல் பங்கேற்று இனிப்புகளை வழங்கி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

முன்னதாக, சலீவன் வீதி ஸ்ரீ ராகவேந்திரர் சுவாமி கோவிலில் வழிபாட்டுக்கு பிறகு இந்து மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் அர்ஜூன் சம்பத் இன்று (3ம் தேதி) செய்தியாளர்களிடம் கூறும்போது,'' அரசியல் மாற்றத்தைக் கொண்டு வருவேன் என ரஜினிகாந்த் அறிவித்து இருப்பது, ரஜினி மக்கள் மன்றத்தினருக்கு மட்டும் அல்ல, ஒட்டுமொத்த தமிழக மக்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவர் தன் அறிவிப்பில் உயிரை பணயம் வைத்து என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்.

அது எங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.அவர் உயிரைப் பணயம் வைத்து வேலை செய்ய வேண்டும் என்பது அவரது தியாகத்தின் வெளிப்பாடு. 2 பெரிய கட்சிகளுக்கு இடையே ஆட்சி மாற்றத்தை கொடுப்பேன் என்று சொல்வதற்குஞ் துணிச்சல் வேண்டும். வீரம் வேண்டும். தியாகம், வீரம், விவேகம் இந்த அறிவிப்பில் வெளிப்பட்டு உள்ளது. அவரது ஆன்மிக அரசியல் கொள்கை, நிச்சயம் 234 தொகுதிகளிலும் வெற்றி பெறும்,'' என்றார்.

# எம்ஜிஆர் வழியில் தொடரட்டும் ரஜினியின் பணி: சைதை துரைசாமி ஆதரவு



எம்ஜிஆருக்குத் துணை நின்று, ஆதரவளித்து, திமுகவை வீழ்த்திய அனைவரும் ரஜினிக்கு ஆதரவு தருவார்கள் என்று சென்னை முன்னாள் மேயர் சைதை துரைசாமி தெரிவித்துள்ளார்.இதுகுறித்து சைதை துரைசாமி இன்று வெளியிட்ட அறிக்கை: "ரஜினிகாந்த் ஜனவரியில் கட்சி தொடக்கம், வருகின்ற டிசம்பர் 31ம் தேதி அறிவிப்பு என்று சொல்லி இருக்கிறார்.

இது சாதாரண அறிவிப்பு அல்ல. தமிழக அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய திருப்பம் இது. 1972ல் எம்ஜிஆர் கொண்டு வந்த மாற்றத்துக்கு இணையாக அமையக்கூடிய திருப்பம் ரஜினி அறிவிப்பு. கடந்த 2018ம் வருடம் மார்ச் 5ம்தேதி சென்னை வேலப்பன் சாவடியில் எம்ஜிஆரின் உருவச்சிலை திறப்பு விழாவில் ரஜினி, "என்னால் எம்ஜிஆர் போல நல்லாட்சியை, ஏழைகளுக்கான ஆட்சியை, சாமானியருக்கான ஆட்சியை, நடுத்தர வர்க்க குடும்பங்களுக்கான ஆட்சியைத் தரமுடியும்" என்பதை ஆழ்ந்த நம்பிக்கையுடன் உறுதிபடச் சொல்லி இருந்தார்.

நல்ல திறமையான ஆலோசகர்களையும் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி அத்தகைய ஒரு ஆட்சியைக் கொடுப்பேன் என்பதையும் ரஜினி சொல்லி இருந்தார். ஏழைகளுக்கான சாமானிய மக்களுக்கான எம்ஜிஆரின் ஆட்சியை மீண்டும் தமிழகத்தில் மலரச் செய்ய ரஜினிகாந்த் முன்வந்திருப்பதை நான் வரவேற்கிறேன்.எம்ஜிஆருக்குத் துணை நின்று, ஆதரவளித்து, திமுகவை வீழ்த்திய அனைவரும் ரஜினிக்கு ஆதரவு தருவார்கள் என்பது திண்ணம்.

கரோனா நோய்த் தொற்றுக் காலத்தில் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் தமிழக மக்களின் நலனை மட்டுமே மனதில் கொண்டு அவர் முழுநேர அரசியலில் ஈடுபடுவது என்று முடிவு எடுத்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது.'தமிழ்நாட்டின் தலை எழுத்தை மாற்றவேண்டிய நாள் வந்தாச்சு. நிச்சயம் அது நடக்கும்' என்ற ரஜினியின் நம்பிக்கையான வார்த்தையை வரவேற்று அவருக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள்". இவ்வாறு சைதை துரைசாமி தெரிவித்துள்ளார்.

# ஈரானின் அணு விஞ்ஞானி மொசன் பக்ரிசதாஹ் கொல்லப்பட்டதை கண்டித்து மக்கள் அஞ்சலி



ஈரானின் முன்னணி அணு விஞ்ஞானி மொசன் பக்ரிசதாஹ் கொல்லப்பட்டதற்கு பழிதீர்க்கப்படும் என்று அந்நாட்டு உயர்மட்டத் தலைவர் ஆயதொல்லா அலி கமனெய் உறுதி அளித்துள்ளார்.

தேர்தலில் தோல்வியைத் தழுவியுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் பதவிக் காலம் முடிவுக்கு வரும் நாள் நெருங்கி வருகின்ற இந்த நேரத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றதனால், மேற்குலக நாடுகள் மற்றும் இஸ்ரேலுடனான மோதலை வலுக்கச் செய்துள்ளது.

ஈரான் அணு ஆயுதத் திட்டத்தின் அனுபவம் வாய்ந்த கட்டமைப்பாளராக இஸ்ரேல் மற்றும் மேற்குலக அரசுகள் நம்பும் மொசன் பக்ரிசதாஹ்வின் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று கமனெய் கடந்த சனிக்கிழமை உறுதி அளித்திருந்தார். எனினும் எமது நாட்டு மக்கள் இந்த இழப்பை தாங்குகின்ற சக்தி கொண்டவர்களாக இல்லை. ஏனென்றால் கொல்லப்பட்ட விஞ்ஞானி மிகுந்த செல்வாக்கு மிக்கவர் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த படுகொலை தொடர்பில் இஸ்ரேல் மீது ஈரான் ஜனாதிபதி கடும் குற்றச்சாட்டை சுமத்தினார். இது அமெரிக்காவில் பதவிக்கு வரவிருக்கும் ஜனாதிபதி ஜோ பைடனின் ஈரானுடனான எந்த ஒரு பேச்சுவார்த்தையையும் சிக்கலாக்குவதாக உள்ளது.



ஈரானுடன் செய்துகொள்ளப்பட்ட 2015 அணு சக்தி உடன்படிக்கையில் இருந்து டிரம்ப் விலகிக் கொண்டதை அடுத்து அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையிலான பதற்றம் அதிகரித்துள்ளது.

ஈரானின் உச்ச அதிகாரத்தை பெற்றிருக்கும் கொமனெய், ஒருபோதும் ஆணு ஆயதத்தை நாடவில்லை என்று ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார். இந்தக் குற்றச்செயல் தொடர்பில் விசாரணை செய்து தாக்குதல்தாரிகள் மற்றும் அதற்கு உத்தரவிட்டவர்களை தண்டிப்பதற்கு நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பக்ரிசதாஹ் பொது வெளியில் அதிகம் தெரியாதவராக இருந்தபோதும் ஈரான் அணு ஆயுதச் செயற்பாட்டில் பிரதான பங்கு வகிப்பவர் என்று இஸ்ரேல் குற்றம்சாட்டுகிறது. டெஹ்ரானில் வைத்து அவரது கார் வண்டி சுற்றிவளைக்கப்பட்டு சரமாரி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார்.

"ஈரான் இதற்கு சரியான வகையில் பதிலடி கொடுக்கும்" என்று ஈரான் ஜனாதிபதி ஹசன் ரூஹானி கடந்த சனிக்கிழமை தொலைக்காட்சி சந்திப்பு ஒன்றில் தெரிவித்தார்.

"உலகளாவிய ஆணவம் கொண்ட சியோனிச கூலிப்படையின் கறைபடிந்த கைகளால் மீண்டும் ஒருமுறை ஈரானிய புதல்வனின் இரத்தம் சிந்தப்பட்டுள்ளது" என்று அவர் இதன்போது தெரிவித்தார். இதில் அவர் இஸ்ரேலை குற்றம்சாட்டும் சொற்பிரயோகத்தையே பயன்படுத்தி இருந்தார்.

இந்தக் கொலை தொடர்பில் தமக்குத் தெரியாது என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்ஜமின் நெதன்யாகு உறுதியாகத் தெரிவித்ததாக இஸ்ரேலிய அமைச்சர் ட்சச்சி ஹெனக்பி தெரிவித்துள்ளார்.

ஈரானின் எச்சரிக்கையை அடுத்து சில நாடுகளின் இஸ்ரேல் தூதரகங்கள் உ'ார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேலிய இராணுவ வானொலி தெரிவித்துள்ளது.

இந்தக் கொலை தொடர்பில் கருத்துக் கூற வெள்ளை மாளிகை, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மற்றும் அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ அதேபோன்று பைடனின் அதிகார மாற்றக் குழு மறுத்துள்ளன. பைடன் எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக பதவி ஏற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரானுடன் அணு சக்தி உடன்படிக்கையில் அங்கம் வகிக்கும் ஜெர்மனி மற்றும் ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் அனைத்துத் தரப்புகளையும் அமைதி காக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9



# தென்னமரவடி படுகொலையின் 36வது நினைவு தினம் இன்றாகும்

தமிழர் வரலாற்றில் மறக்கமுடியாத தென்னமரவடி படுகொலை 03/12/1984 இரு பெண்கள் மட்டும் கடும் சித்திரவதைக்கு பின்னர் ஆடைகள் எதுவும் இன்றி ஏ-தோவொரு விதத்தில் தப்பித்துக்கொண்டனார். தமிழர் தாயக பிரதேசமான வடக்கையும் கிழக்கையும் புவியியல் இனரீதியாக இணைத்து நிற்கும் கிராமமே தென்னமரவடி எனும் பழமைமிக்க தமிழ் கிராமம்.

தென்னவன் எனும் தமிழ் மன்னன் தென்னமரவடி இராசாதானியை ஆட்சிபுரிந்ததால் தென்னன் மரபு அடி என அழைக்கப்பட்டதாக வரலாறுகள் சொல்கின்றன.புரதான ஆறு வன்னிமைகளோடு தென்னமரவடியும் ஒன்றாக விளங்கியுள்ளது. புரதான காலத்தில் பல குறுநில தமிழ் மன்னர்கள் தென்னமரவடியை ஆட்சிபுரிந்துள்ளனர். பாண்டிய மன்னர்காலத்தில் பல பிராமணர்களும்.வேதாரணிய வைத்தியர்களும் பல குலத்தவர்களும் தென்னமரவடியில் குடியேறியதாக வரலாறுகள் சொல்கின்றன.அத்தோடு பாண்டிய மன்னர்களினுடைய மரக்கலங்கள் தென்னமரவடி துறையில் வந்தடைந்ததாகவும் குமுளமுனையில் கட்டப்படும் யானைகள் செம்மலைக்குடா தென்னமரவடி குடாக்களினூடாக தென்னிந்தியாவுக்கு அனுப்பப்பட்டதாகவும் வரலாற்று நூல்கள் ஆதாரப்படுத்துகின்றன. இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க தென்னமரவடி போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் இருந்து எதிரிகளால் மாறி மாறி முற்றுகைக்குட்பட்டதனால் தென்னமரவடி பெரும் பிரதேசமக்கள் திருகோணமலை. தம்பலாகாமம்.செம்மலை. அனுராதபுரம் என புலம் பெயர்ந்தார்கள் என்றும் அங்கே புதிய குடியேற்றங்களை நிறுவினார்கள் என்றும் சொல்லப்படுகின்றது.



தென்னமரவடியோடு இணைந்திருந்த அமரிவயல் எனும் தொன்மைமிக்க தமிழ்கிராமம் முற்றாக அழிந்துபோனதாகவும் சொல்லப்படுகிறது. இவ்வாறாக வீழ்ச்சி கண்ட தென்னமரவடி பிரித்தானியர் வருகைக்கு பின்னரான காலத்தில் பெரும்பான்மை சிங்களவர்களாலும் சிதைக்கப்பட்டது. இக்கிராமம் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச 31E பிரிவின் கீழ் அமைந்துள்ளது.

திருகோணமலையில் 65கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. முல்லைத்தீவையும் திருகோணமலையையும் இணைத்து நிற்பதால் வடகிழக்கை இணைக்கும் இருதய நிலமாக தென்னமரவடி அமைவுபெற்றுள்ளது. முல்லைத்தீவு கொக்கிளாய்கடல் நீரேரிக்கு மறுகரையில் வடகிழக்கை பிரித்து ஓடும் பறையனாற்று கரையில் தென்னமரவடி அமைந்துள்ளது. தென்னமரவடியின் அமைவிட சிறப்பு தமிழ் பேசும் மக்களின் ஈழ நிலப்பரப்பை இணைத்து விடும் என்பதால் தென்னமரவடி மீது சிங்கள ஆட்சியாளர்கள் ஆக்கிரமிப்பு, இல்லாது அழித்தல் எனும் சதித் திட்டத்தையே மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் செய்துவருகின்றனர்.இக்கிராமத்தை 1970 களில் திருகோணமலையில் இருந்து பிரித்து அனுராதபுர மாவட்டத்தோடும் இணைத்தனர்.

பின்னர் தமிழ் அரசியல் தலைவர்களின் தொடர் அழுத்தத்தால் மீண்டும் திருகோணமலையோடு இணைக்கப்பட்டது. இருந்தும் தென்னமரவடி கிராமத்தை சிங்களமயமாக்கும் பணியை சிங்களம் நிறுத்தவில்லை.1980 களில் பல தொன்மை சிறப்புடைய இக்கிராமத்தின் பல கல்வெட்டுக்களை இல்லாமல் ஆக்கினர்.அகழ்வாராட்சி என்ற பெயரில் பல வரலாற்று அடையாளங்களை திருடிச்சென்றுள்ளனர்.

அதை இன்றுவரை இக்கிராமத்தவரிடம் ஒப்படைக்கவில்லை.கந்தசாமி மலை பிரதேசத்தில் இன்றும் பல தொன்மை அடையாளங்களும் பழம் பெரும் முருகன் ஆலயமும் அமைந்துள்ளது.இதனால் இவ்வலயத்தை பௌத்தபுனித பூமி என தொல்அகழ்வாராச்சி சபை ஆக்கிரமித்துள்ளது.அத்தோடு இத்தொன்மை மிக்க தமிழ் கிராமத்தின் வயல்நிலங்களை சிங்களவர்க்கு கைமாற்றியது.

அத்தோடு மட்டுமன்றி பதவியா.சிறிபுர.சிங்கபுர.13ம் கொலணி சிங்கள குடியேற்றங்களை தென்னமரவடி கிராமத்தில் அத்துமிறி சிங்களம் நிறுவியது. இதனால் தென்னமரவடி மக்கள் 1980, 1984ம் ஆண்டு காலப்பகுதிகளில் தனித்து நின்று தென்னமரவடி நிலத்தை பாதுகாப்பதற்காக சிங்கள காடையர்களோடு முரண்பட்டு மோதிக்கொன்றனர்.பல தடவைகள் சிங்கள குடியேற்றவாசிகளை விரட்டி அடித்னர். தமக்கே உரித்தான இடியன் துவக்குகளை இவர்கள் பயன்படுத்தி சிங்களவர்களை விரட்டி அடித்த வீரம்மிக்க கிராமமாக தென்னமரவடிமக்கள் விளங்கினர்.

இதனால் ஆத்திரம் கொண்ட சிங்கள இனவாத அரசும் சிங்களை காடையர்களும் ஒன்றாகி பலமாகி பலதடவைகள் தென்னமரவடி கிராம மக்களை விரட்டி அடித்தனர். காடுகளில் பலநாட்கள் தங்கிய மக்கள் சொல்லண்ணா துயர்களை அனுபவித்தனர்.

அத்துமீறிய சிங்களவர்கள் இக்கிராமத்தவரின் சொத்துகளை சூறையாடி சென்றும் இருந்தனர்.மீண்டும் கிராமத்துக்குள் வந்தவர்கள் இந்நிலை கண்டு அச்சமும் கவலையும் கொண்டனர். தென்னமரவடிதமிழர்க்கும் சிங்களவர்க்கும் பகை உச்சம் கொண்டிருந்தது. எந்த நேரத்திலும் தென்னமரவடி அபகரிக்கப்படும் சூழல் உருவானது. மக்கள் அச்சத்துடன் ஒவ்வோர் இரவையும் கழித்தனர்.அன்று 1984 மார்கழி மாதம் மூன்றாம் திகதி தென்னமரவடியை அண்மித்த பகுதிகளில் வேட்டு சத்தம் பலமாக கேட்டது. தென்னமரவடியை சேர்ந்த பலரை சிங்கள காடையர்கள் கொலைசெய்துவிட்ட செய்தி பரவியது.தோட்டங்கள்.வயல் நிலங்களிற்கு சென்ற பலர் வீடு திரும்பவில்லை.பிள்ளைகள். கணவன்மார்களை காணாது தவித்த உறவினர்கள் அவர்களைதேடி சென்றனர். இவ்வாறு பிள்ளைகளையும் கணவன்மாரையும் தேடிச்சென்ற பல பெண்களை சிங்கள காடையர்கள் சுற்றிவளைத்து பிடித்தனர்.பலர் சிதறி ஓடியும் கடையர்களிடமிருந்து தப்பமுடியவில்லை. தாய்மார் முன்னிலையில் பிள்ளைகள் வெட்டிக்கொல்லப்பட்டனர்.

கணவர்மார் முன்னிலையில் பல பெண்கள் அம்மணமாக்கி கற்பழித்து கொலைசெய்யப்பட்டனர்.இந்த கொடும் செயலை சிங்களம் செய்து முடித்தது. பிள்ளைகளை தேடிச்சென்ற இரத்தினம்.வேலாயுதம் மனைவி ஆகிய இருவரையும் தவிர ஏனைய எல்லோரும் கொலைசெய்யப்பட்டனர். சண்முகம் முருகுப்பிள்ளை 42முருகுப்பிள்ளை அபிராமி 40முருகுப்பிள்ளை பாலகிருஸ்ணன் 18விநாசித்தம்பி கனகையா 45கனகையா சேதுப்பிள்ளை 38கந்தையா கெங்காதரன் 24சண்முகம் சதாசிவம் 35கணபதி வேலாயுதம்48பூசாரி சின்னையா 65நமசிவாயம் கலையன்18ஐங்கரப்பிள்ளை திருச்செல்வம் 23ஆகியோர் காடையர்களால் படுகொலை செய்யப்பட்னர். ஆனால் இரு பெண்கள் மட்டும் கடும் சித்திரவதைக்கு பின்னர் ஆடைகள் எதுவும் இன்றி ஏதோவொரு விதத்தில் தப்பித்துக்கொண்டனார்."ஐயோ சிங்களவர் திரண்டு வாறான்கள்.எல்லோரும் ஊரைவிட்டு ஓடுங்கோ. பிடிச்சு வைச்சிருந்த எல்லோரையும் வெட்டிக்கொண்றிட்டான்கள் …"என்ற அந்த இரு பெண்களின் அலறல் தென்னமரவடியை நிலைகுலைய செய்தது.

அன்றே தென்னமரவடி மக்கள் காடுகளிற்குள் தஞ்சம் புகுந்தனர்.அந்த நொடிப்பொழுதில் சிங்கள காடையர்கள் தென்னமரவடியை சூறையாடி ஊர் முழுவதையும் எரித்தனர். காடுகளிற்குள் ஒளிந்த மக்கள் கண்களில் தென்னமரவடி எனும் வளமான ஊர் எரியூட்டப்பட்டு புகைமண்டலம் வெளிவந்ததை பார்த்தனர்..ஆறாத வடுக்களுடன் கண்களில் நீர் கசிந்திட முதியோர்.இளையோர்.குழந்தைகள் என பதினெட்டு நாள் அச்சமான காட்டு வழி பயணமாக முல்லைத்தீவு.முள்ளிவளை.புதுக்குடியிருப்பு.செம்மலை போன்ற பகுதிகளிற்கு இடம் பெயர்ந்து சென்றனர்.

1984ல் இல் தமிழர் தாயகத்தில் முற்றுமுழுதாக முதலில் இடம் பெயர்ந்த தென்னமரவடி கிராமத்தின் இடம்பெயர் அவலமும் தென்னமரவடி படுகொலையும் நடந்து முப்பத்து மூன்று வருடத்தை கடந்தும் இன்னும் ஆறாத துயரமாகவே தமிழர் மனங்களில் பதிந்துள்ளது.

# இலட்சக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்றமையே போர்க்குற்றம் என்றார் கஜேந்திரகுமார் சபையில்

*(3ம் பக்கத் தொடர்ச்சி)*

கேட்டு நான் பெரும் அச்சமடைந்தேன். ஏனெனில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் போர் ஆரம்பிக்கப்பட்டபோதே நான்கு இலட்சத்து அறுபதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் இருந்தனர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

போர் தொடங்கியபோது வன்னியில் நான்கரை இலட்சம் பொதுமக்கள் விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டு பகுதிக்குள் வாழ்ந்தனர். ஆனால், 17 ஆயிரம் மக்களே விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்தனர் என்று அரசு கூறியது. உணவு மற்றும் மருந்துகளை 17 ஆயிரம் மக்களுக்கு மட்டுமே அனுப்பியது. இதுதான் உண்மை. மூன்றரை இலட்சம் மக்கள் பின்னர் முகாம்களுக்கு வந்தனர். ஆகவே, இலக்கங்களில் அரசு பொய்களைக் கூறிக்கொண்டுள்ளது. இறுதிப் போரில் சிக்கிய ஒன்றரை இலட்சம் மக்களுக்கு என்னவானது என்றே தெரியவில்லை" - என்றார்.

கஜேந்திரகுமார் எம்.பி. உரையாற்றிக்கொண்டிருந்தபோது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, முன்னாள் இராணுவத்தளபதியும் எதிர்க்கட்சி எம்.பியுமான பீல்ட் மார்' சரத் பொன்சேகா மற்றும் அமைச்சர்கள், அரச தரப்பு பின்வரிசை எம்.பி.க்கள் குறுக்கீடுகளைச் செய்ததுடன் சிலர் மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளையும் பிரயோகித்தனர்.

**கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்**
**Canadian Tamils Remembrance Organization**
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

*எமது அன்புக்குரிய அனைத்து உறவுகளுக்கும் வணக்கம்,*

இந்த ஆண்டு, தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள் மெய் நிகர் வணக்க நிகழ்வாக மிக உணர்வு பூர்வமாக, நடைபெற்றது. நீங்கள் அனைவரும் இல்லங்களில் இருந்த படி,தாயக நினைவோடு மாவீரர்களுக்கான வீர வணக்கத்ததைச் செலுத்தினீர்கள். நீங்கள் அனைவரும் கார்த்திகை மாதம் முழுவதும் மிகுந்த ஈடுபாட்டுடன் உங்களது உணர்வுகளைப் பல்வேறு வகைகளில் சமூக ஊடகங்களின் ஊடாக வெளிப் படுத்தியிருந்தீர்கள். நீங்கள் அனைவரும் இல்லங்களில் இருந்து தமிழர் தேசிய நினைவெழுச்சி நாளில், மாவீரர் வழிபாடு செய்வதற்குரிய அனைத்து ஒழுங்குகளையும் கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் முழுமையாக முன்னெடுத்திருந்தது.

அகவம் முன்னெடுத்த மாவீரர் நாள் மெய் நிகர் வீரவணக்கத்துக்குரிய அனைத்து முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருந்த சமூகக் கட்டமைப்புக்கள், தொழில் நுட்பப் பிரிவினர், துயிலும் இல்லக் குழுவினர், நேரலை ஒளிபரப்பை வழங்கிய சமூக ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள், கலைஞர்கள், நுண்கலைத் துறையினர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், தமிழ் வணிக நிறுவனத்தினர், செயற்பாட்டாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள், தேசப் பற்றாளர்கள், மொழியார்வலர்கள், தமிழ் மக்கள் அனைவருக்கும் கனடியத் தமி-ழர் நினைவெழுச்சி அகவம் தனது மனம் நிறைந்த நன்றியை மன நிறைவோடு தெரிவித்துக் கொள்கின்றது.

இன்றைய உலகு தழுவிய வெளிப் புறச் சூழலில், நீங்கள் அனைவரும் நாளாந்தம் பல இடர்களைச் சுமந்து வாழ்கின்ற போதும், உங்களது மாவீரர் உணர்வை வெளிப்படுத்தியிருந்த முறைமை பாராட்டப் பட வேண்டியதொன்றாகும். உங்களது எழுச்சி மிக்க மாவீரர் சார்ந்த வெளிப்பாடுகள் அனைத்தும் எல்லோருக்கும் ஒரு புத்துணர்வைத் தந்திருக்கின்றது. இந்தப் புத்துணர்வானது, நாம் அனைவரும் தாயகம் நோக்கிய பணிகளில் உறுதியாகச் செயற் படுவோம் என்ற நம்பிக்கையைத் தந்திருக்கின்றது. இந்தப் புத்துணர்வோடும், நம்பிக்கையோடும் தாயகப் பணிகளில் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுவோமாக. நன்றி. வணக்கம்.

**கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.**
தொடர்பு இலக்கம். 647 619 3619.

## முக்கிய அறிவித்தல்

## பிரம்டன் தமிழ் முதியோர் கழக அங்கத்தவர்களுக்கு

COVID-19 தொற்று நோய் பரவல் காரணமாக மேற்படி கழகத்தினால் நடாத்தப்படும் அங்கத்தவர்களுக்கான பொதுக் கூட்டங்கள், வைத்திய கருத்தரங்குகள், ஆலோசனைகள், யோகாப் பயிற்சிகள், ஆங்கில வகுப்புகள், keyboard வகுப்புகள், Brain Beat Dance என்பன ZOOM மூலம் நடாத்த கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது. அங்கத்தினர் அனைவரும் பங்குபற்றி பயனடையுமாறு வேண்டப்படுகின்றனர்.

ZOOM LINK I.D, PASSWORD என்பன அங்கத்தவர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. கிடைகாதவர்கள், தவறவிட்டவர்கள் நிர்வாகத்தினரைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

**விபரங்கள்:**

1) யோகாப் பயிற்சி: பிரதி திங்கள் / வியாழன் தோறும் காலை 10:00 மணி முதல் 11:00 மணி வரை.
2) பொதுக் கூட்டம்: பிரதி திங்கள் இரவு 8:00 மணி முதல் 10:00 மணி வரை.
3) ஆங்கில வகுப்புகள்: திங்கள / வெள்ளி தோறும் மாலை 4:00-5:00 மணிவரை நடைபெறும்.
4) KEY BOARD வகுப்புகள்: பிரதி செவ்வாய் தோறும் காலை 10 மணி முதல் மாலை 1:30 வரை, நான்கு குழுக்களாக நடைபெறும்.
5. BRAIN BEAT DANCE: புதன்கிழமை மாலை 8:00-8:30 மணிவரை நடைபெறும். கார்த்திகை 23- மாவீரர் நினைவு தினம் மாலை 8:00-10:00 மணிவரை பொதுக்கூட்டத்தில் அனுசரிக்கப்படும்,
6. கருத்தரங்குகள். பிரதி வியாழன் மாலை 8:00-10:00 வரை. கார்த்திகை 26- DR. PAUL JOSEPH அவர்களால் Covid-19 ன் தற்போதைய நிலமை பற்றிய கருத்தரங்கு மாலை 8:00-10:00 வரை நடைபெறும்.

நன்றி!

தலைவர்: திரு. டேவிட் ராஜரட்ணம்
(416) 458-3270

# கனடா "உதயன்" பத்திரிகையின் 24வது ஆண்டு நிறைவு நாள் வாழ்த்து

கீழ் வானில் எழுந்து வரும்
இளம்பரி ஒளி வீச்சின்
செழுங்கதிராய் சிவந்து
வரும் வார இதழ் வாரத்தின்
வெள்ளி தோறும் விருப்புடன்
வெளியாகும் கனடிய "உதயன்"
தமிழ் இதழின் அகவை
இருபத்து நான்கு நிறைவு
ஆண்டை எண்ணி முகம்
மலரும் வாசகர்கள் பல்
ஆயிரத்தைக் கடந்து நிற்கும்
ஆயிரத்தில் ஒருவனென
அகமகிழ்ந்து வாழ்த்துவதில்
சுகமான தமிழ் எழுதிப் பேருவகை
அடைகின்றேன்!

இற்றைக்கு கால் நூறு ஆண்டுகள்
முன்பாக வற்றாத தமிழூற்றில்
மூழ்கிய ஐவர் கைகோர்த்து
எழும் பிரிதி இதுவென்று "சூரியன்"
நாமத்தை தாங்கி வரும் ஏடாக
அறிமுகம் செய்து ஆனந்தம் மிகக் கொண்டார்

பாண்டவர்கள் ஐவரும்
வேண்டிய தமிழ் ஏட்டை
தலைமையேற்று எழுதுவதற்கு
கலையுணர்வு மிகக்கொண்டு
கதை,கவிதை, கட்டுரைகள்
"மலையன்பன்" புனைபெயரில்
எழுதிவரும் இளம் தமிழர்
லோகேந்திரலிங்கம் என்பவரின்
தலைமையிலே ஒப்படைத்து உயர்வு கண்டார்

தமிழுக்கும் தமிழருக்கும் ஊறு வந்தால்
துடித்தெழுதும் கரிகாலன் வழிவந்த
வழித்தோன்றல்
இவராமோ! வியப்புற்ற தோழரெல்லாம்
தமிழிக்குன் விடியலுக்கு
உரமூட்டும் 'கதிரோட்டம்'' தனையெழுதி
தலை நிமிரவைப்பார்...
கலையுணர்வு மிகக்கொண்டு
அரங்க நிகழ்வுகளை அறிமுகம் செய்துவைப்பார்
ஆடல், பாடலுடன் அரிதாரம் பூசிவரும்
நாடக வடிவங்கள், நாட்டிய நடனங்கள்,
கவியரங்கு
மெல்லிசைகள், வானொலி உரையாடல்
அதுமட்டுமன்றி ஆண்டு தோறும்
தகுதி கண்டு விருது வழங்கி கௌரவித்தல்
கடல் கடந்து தமிழ் கூறும் நல்லுலகில்
கனடாவின் கலைத்தூதுவராகப் பயணித்து
"உதயன்" தமிழ்ப்பணியை உலகிற்கு
உரத்துச் சொல்லும் சொல்லாடல் வல்லோன்
தமிழ்பற்றும், இனப்பற்றும் இரத்தத்தில்
கலந்ததினால் இருபத்து நான்கு ஆண்டு
ஊடக இலக்கிய சேவைகளை
உலகோர்கள் அறிவதற்கும், பெறுவதற்கும்
இணையவழி உடாக முகம் பார்த்து உரையாடும்
மனமகிழ் விழாவாக மலர்ந்திடும் இந்நாளை
கனடிய தமிழ் சமூகத்தின் சார்பாகவும்,
எழுதுகோல் வேந்தர்கள். கவிஞர்கள்,
வாசகர்கள், கட்டுரையாளர்கள், கலைஞர்கள்,
ஊடகவியலாளர்கள் சார்பாக
வாழ்த்து மகிழ்கின்றேன்

*--வீணைமைந்தன்- கனடா*




Amma Brand
இப்பொழுது கனடாவிலும் கிடைக்கின்றது!
Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
NOW IN CANADA
100% Natural
Amma Apple Cider with Mother Vinegar
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471
Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
750ml
375ml
Amma Herbal
Juices
NOW IN CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice with Aloe Vera
Aloe Noni with Aloevera Juice
100% HERBAL
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471

# COVID-19க்கான தீர்வு **உங்களின் தூரத்தைப் பேணுவதுடன்** ஆரம்பிக்கிறது.

- முக மறைப்பொன்றை அணியுங்கள்
- உங்களின் வீட்டில் இல்லாதவர்களுடன் 2 மீ இடைவெளியைப் பேணுங்கள்
- உங்கள் வீட்டு அங்கத்தவர்களை மட்டும் உங்களின் நெருங்கிய தொடர்பில் வைத்திருங்கள்
- அடிக்கடி உங்கள் கைகளைக் கழுவுங்கள்



**பரவலைத் தடுத்தல் உங்களில் ஆரம்பிக்கிறது**
மேலும் அறிவதற்கு ontario.ca/coronavirus ஐப் பார்வையிடுங்கள்.

ஒன்ராறிரோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario

# STEELES PODIATRY CLINIC

**கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்**

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# Carefirst Family Health Team

*Accepting New Patients*



**புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்**

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்

# #24 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

தொடரும் கதாநாயகிகள்...

"நடிகர் திலகம்" அவர்கள் நாடகப் பள்ளிகளில் முதன்மை மாணவனாக கோலோச்சிய காலங்களில் நூர்ஜகானாகவும், சீதாவாகவும், பத்மாவதியாகவும் பெண் வேடமிட்டு ரசிகர்களை மயங்க வைத்தார், பிரமிக்க வைத்தார்.



"பராசக்தி" படம் மூலம் நாயகனாகத் தோன்றி திரையுலகைத் தன் வசப்படுத்தியபின் பன்முகத் திறமை கொண்ட திரைநாயகிகள் அவருடன் இணைந்து நடிக்க முண்டியடித்தனர்.

குறிப்பிட்ட நாயகி தான் என்னுடன் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும் என எவ்வித கட்டுப்பாடும் விதிக்காமல், தயாரிப்பாளர்கள் அல்லது இயக்குனர் யாரை ஒப்பந்தம் செய்கிறாரோ அவர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்ததில் சிவாஜி அவர்களின் பங்கும் முக்கியமாகிறது.

"சிவாஜி அண்ணா அவர்களுடன் எனக்கு முதல் படம் டைரக்டர் கேஎஸ் கோபாலகிருஷ்ணனின் "கை கொடுத்த தெய்வம்" ஒப்பந்தமாயிற்று. "இயக்குனர் திலகம்" கேஎஸ்ஜி அவர்களால் "கற்பகம்" படத்தின் மூலம் அறிமுகமானவள் நான். எனக்கு அவரது "கை கொடுத்த தெய்வம்" இரண்டாவது படம். அதுவும் சிவாஜி அண்ணாவுடன் நடிப்பது அறிந்து மிகுந்த மகிழ்ச்சி. இப்படத்தில் "இலட்சிய நடிகர்" எஸ் எஸ் ஆரின் உயிர்த்தோழன் சிவாஜி அண்ணா. எனக்கு அவர் படத்தில் உடன்பிறவா சகோதரர். பல அனுபவங்கள் எனக்கு நடிப்பில் கிடைக்க வைத்த படம் அது. சிவாஜி அண்ணாவைப் பற்றிக் கூறுவதாகில் அவர் நடிப்பை விட அவரது உயர்ந்த பண்பை தான் முதலில் பாராட்டுவேன். நானும் அவரும் சேர்ந்து நடிக்கும் ஒரு காட்சியை டைரக்டர் படம்பிடித்துக் கொண்டிருந்தார். கதையின்படி நான் வடநாட்டு தமிழ் பெண். அண்ணாவின் உயிர் நண்பராக வரும் எஸ் எஸ் ஆர் அவர்களுடைய மனைவி. இரு பெரும் நடிகர்களுடன் ஒரே சமயத்தில் நடிக்க வேண்டிய பல காட்சிகள் இடம்பெற்றன. ஒரு காட்சியில் வடநாட்டு தமிழச்சியான எனக்கு புடவை கட்டத் தெரியாது. என்னை தனியாக அழைத்துப் போய் புடவை எப்படி கட்டுவது என்று சிவாஜி அண்ணா சொல்லிக் கொடுக்கும் நகைச்சுவையான காட்சியைத்தான் அன்று படப்பிடிப்பில் டைரக்டர் கவனித்துக் கொண்டிருந்தார். அண்ணா புடவையை கையில் எடுத்துக்கொண்டு... "இந்த கால பெண்களுக்கு புடவை கூட கட்டத் தெரியாது என்பதற்கு இதோ.... இந்த விஜயாவே உதாரணம்", என்று சத்தம் போட்டு சொன்னார். இப்படி நகைச்சுவையாகப் பேசி நடிப்பு சொல்லித்தரும் நல்லவர்தான் எங்கள் சிவாஜி அண்ணா..." என்று நினைவு கூறுகிறார். திருமதி கே ஆர் விஜயா அவர்கள், "புன்னகை அரசி" கே ஆர் விஜயா நடிகர் திலகம் அவர்களுடன் "செல்வம்" "இரு மலர்கள்" "ஊட்டி வரை உறவு" "நெஞ்சிருக்கும்வரை" "திருடன்" "தங்கை" "எதிரொலி" "ராமன் எத்தனை ராமனடி" "பாலாடை" "திரிசூலம்" "தவப்புதல்வன்" "தங்கப்பதக்கம்" "ஜெனரல் சக்கரவர்த்தி" "மிருதங்க சக்கரவர்த்தி" "கல்தூண்" "நாம் பிறந்த மண்" "சரஸ்வதி சபதம்"" ஆகிய வெற்றிப் படங்களில் நடித்திருந்தாலும் "தங்கப்பதக்கம்" எஸ்பி சவுத்ரியின் (சிவாஜி) மனைவியாக நடித்து தானும் நடிப்பில் ஒரு "தங்கப் பதக்கம்" என்று நிரூபித்தார்.



நடிகர் திலகம் அவர்களது கதாநாயகிகள் வரிசையிலே பல மூத்த முன்னணி நடிகைகளையும் அவருடன் ஜோடி சேர்ந்து நடித்த வேளைகளில் ஏற்பட்ட அனுபவங்களையும் இப்பகுதியில் குறிப்பிட்டு வருகிறேன்.

அவ்வகையில் சிவாஜி படங்களில் நடித்த நாயகிகளுள் திருமதி தேவிகா, திருமதி சுஜாதா, செல்வி ஜெயலலிதா, திருமதி ராஜசுலோச்சனா, திருமதி வைஜெயந்திமாலா, போன்ற நட்சத்திர அந்தஸ்துக்குரிய நடிகைகளும், ஓரிரு படங்களில் இணைந்த திறமை வாய்ந்த நடிகைகளான காஞ்சனா, லட்சுமி, சரிதா, ஸ்ரீதேவி, ஸ்ரீப்ரியா, ஸ்ரீவித்யா, குமாரி கமலா லட்சுமணன், குசலகுமாரி, உஷா நந்தினி, வடிவுக்கரசி, அம்பிகா, ராதா என பட்டியலில் இடம் பெறுகிறார்கள். திருமதி மனோரமா ஆச்சி கூட சிவாஜி அவர்களுடன் ஜோடியாக நடிக்க வேண்டும் என்கின்ற விருப்பத்தை "ஞானப் பறவை" மூலம் நிறைவேற்றிக் கொண்டார். இவ்வரிசையில் திருமதி விஜயகுமாரி, சாரதா, விஜயநிர்மலா ஆகியோரையும் குறிப்பிட்டேயாகவேண்டும். அது தவிர அவ்வப்போது திரைக்கதைக்கு ஏற்றாப்போல் இணையும் பழம்பெரும் நட்சத்திரமான பி.எஸ் சரோஜா, இ.வி. சரோஜா, வெண்ணிற ஆடை நிர்மலா, எஸ். சகுந்தலா, ஜி சகுந்தலா, சந்திரகாந்தா போன்றவர்களையும் மறப்பதற்கில்லை.

நடிகர் திலகம் அவர்களின் வரலாற்று காவியங்களான "வீரபாண்டிய கட்டபொம்மன்" நாயகி திருமதி எஸ் வரலட்சுமி (தேவி ஜக்கம்மா) கப்பலோட்டிய தமிழன் பெரியார் வ.உ.சி (சிவாஜி)யின் இல்லத் தலைவி மீனாட்சியாக நடித்த குமாரி ருக்மணி, "ராஜராஜசோழன்" மகள் குந்தவைபிராட்டியாக நடித்த திருமதி லக்ஷ்மி (குமாரி ருக்மணியின் மகள்) "ராஜரிஷி" விசுவாமித்திரர் சிவாஜியின் நிஷ்டையை கலைப்பதற்காக இந்திரலோகத்திலிருந்து வந்து ஆடினார் பாடினார். அது மட்டுமல்ல சில நேரங்களில் "தியாகம்" "ஆனந்தக்கண்ணீர்" என சில படங்களில் சிவாஜியுடன் இணைந்து பெருமையடைந்தார்.



திருமதி. சவுகார் ஜானகியின் சகோதரி கிருஷ்ணகுமாரி - "பராசக்தி"யில் சகோதரி கல்யாணியாக நடித்த ஸ்ரீரஞ்சனி மற்றும் அண்ணாவால் பாராட்டு பெற்ற சந்திரகாந்தா ஆகியோருடன் தலைமுறை நடிகைகளான மீனா, நதியா, சரிதா, சந்திரகலா, சுமித்ரா, பிரமிளா எனத் தொடரும் நடிகைகளுடன் "பொன்மகள் வந்தாள் பொருள் கோடி தந்தாள்" என பாடல் காட்சியில் பங்கெடுத்த "சொர்க்கம்" விஜயலலிதாவையும் மறப்பதற்கில்லை. "தங்கச் சுரங்கம்" பாரதியையும் குறிப்பிட்டேயாகவேண்டும். வானத்திலிருந்து பூமிக்கு அழைத்து வரப்பட்ட இயக்குனர் ஸ்ரீதரின் கண்டுபிடிப்பான அழகுமகள் காஞ்சனாவை (விமானப் பணிப்பெண்ணாக வேலை பார்த்தவர்) சிவாஜி அவர்களுக்கு "சிவந்தமண்" நாயகியாக்கி முதன்முதல் சுவிட்சர்லாந்து, பாரீஸ், ரோம் என ஐரோப்பிய நகரங்களில் "ஒரு ராஜா ராணியிடம் வெகு நாளாக ஆசை கொண்டான்" என காதல் கீதம் இசைக்க வைத்தது மட்டுமல்லாமல் "பட்டத்து ராணி பார்க்கும் பார்வை வெற்றிக்கு தான்" என எகிப்திய பிரமிடுகளின் பின்னணியில் சிவாஜியின் சவுக்கடிகளுக்கு அரபுநாட்டு அழகியாக சிவந்த மண்ணில் காஞ்சனா அவர்கள் ஆடும் நடனம் காலத்திற்கும் பேசப்படும் காட்சியாகும்!. எனது ஐரோப்பிய பயணத்தின்போது நடிகர் திலகமும், காஞ்சனாவும் காதல் கீதம் இசைத்து படமாக்கப்பட்ட இடங்களை 90களில் நானும் நேரில் பார்த்து ரசித்தேன்.

"நடிகர் திலகம்" அவர்கள் 1952இல் "பராசக்தி" நாயகனாக அறிமுகமாகியதிலிருந்து தமிழ் சினிமா உலகின் பொற்காலம் ஆரம்பமானது. இந்த பொற்காலத்தில் நடிக நடிகைகளும் தங்கள் வாழ்நாளில் ஒரு படத்திலாவது சிவாஜி அவர்களுடன் நடித்துவிட்டால் அது ஒரு "மகா பாக்கியம்" "பெரும்பேறு" என நினைத்தார்கள்.



அவ்விதம் பெரும்பேறு பெற்ற நட்சத்திரங்களில் ஒருவர் தான் செல்வி ஜெயலலிதா அவர்களும், அவரது தாயார் திருமதி சந்தியா அம்மா அவர்களும்.

திருமதி சந்தியா அம்மா அவர்கள் சிவாஜி இடத்து மிகவும் மரியாதையுடன் பழகுவார். இவர் ஒரு சிறந்த குணச்சித்திர நடிகையும் ஆவார். "சாந்தி" படத்தில் சிவாஜிக்கு தாயாக நடித்தவர். வேறு சில சிவாஜி படங்களிலும் தோன்றியவர். சந்தியா அம்மையாரது குடும்பத்துடன் மிக நெருக்கமாக பழகுபவர்கள் ஜெயலலிதாவை "அம்மு" என்று செல்லமாக அழைப்பதுண்டு. "அம்மு... அம்மு" என்று சிவாஜி அவர்களால் அழைக்கப்பட்ட குழந்தை வளர்ந்து பெரியவளானதும், தனது தாயாருடன் நடித்த நடிகர் திலகத்துடன் ஜோடி சேர்ந்து நடித்த வரலாறுகள் தமிழ்த்திரையுலகில் புதுமையானதல்ல. சிறுமி ஜெயலலிதா பரதம் பயின்று அரங்கேற்றம் கண்டபோது அந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி "தங்கச் சிலையே நீ வாழ்க!" என வாழ்த்தியவரும் நடிகர் திலகமேயாகும்! பல வருடங்களுக்குப் பின் செல்வி ஜெயலலிதா அவர்கள் அதிமுகவின் தலைவியாக தமிழக முதலமைச்சராக பதவியேற்ற போது பிரஞ்சு நாட்டு அரசு சிவாஜி அவர்களது கலைப் பணியை கௌரவிக்கும் முகமாக "செவாலியே விருது" வழங்கி பாராட்டிய விழாவிற்கு முதலமைச்சராக செல்வி ஜெயலலிதா தலைமையேற்றதையும் நினைத்துப்பார்க்கிறேன். முதன் முதல் எஸ் பி பாலசுப்ரமணியம் சிவாஜிக்கு பின்னணி பாடிய "சுமதி என் சுந்தரி" என்ற திரைப்படத்தின் மூலம் சிவாஜி அவர்களுடன் கதாநாயகியாக இணைந்த "அம்மு" அவர்கள் தொடர்ந்து "கலாட்டா கல்யாணம்" "ராஜா" "எங்கிருந்தோ வந்தாள்" "பட்டிக்காடா பட்டணமா" "எங்க ஊர் ராஜா" "தெய்வமகன்" "பாட்டும் பரதமும்" என100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிப் படங்களில் நடித்தது மட்டுமல்ல நடிகர் திலகம் அவர்களின் 150வது படமான "சவாலே சமாளி" படத்தில் இணைந்து நடித்த பெருமையும் "அம்மு"வுக்கு அமைந்தது!.

பல ஆண்டுகளுக்கு முன் அதாவது 1968-ஆம் ஆண்டு "பொம்மை" இதழுக்காக நடிகர் திலகம் அவர்களுடன் அம்மு அவர்கள் நடத்திய பேட்டியிலிருந்து சில பகுதிகளை குறிப்பிட்டு இவ்வாரக் கதாநாயகிகள் வரிசையை நிறைவு செய்கிறேன்.

பேட்டியிலிருந்து... "அப்போது கலாட்டா கல்யாணம் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. படப்பிடிப்பு இடைவேளையில் "பொம்மை"க்காக சில கேள்விகளை அவர்களிடம் கேட்க தொடங்கினார். "மிகுந்த திறமைசாலிகளுக்கும் சில சமயம் அவர்கள் மேற்கொண்டிருக்கும் தொழிலிலேயே சவாலாக சில விடயங்கள் முளைத்துவிடும். அதுபோல் சிறந்த நடிகரான உங்களுக்கே சவாலாக இருந்த வேஷம் எது? என்று கேட்டதற்கு சிவாஜி அவர்களின் பதில் கீழ்கண்டவாறு அமைந்தது.

"நல்ல கேள்வி! "கப்பலோட்டிய தமிழன்" ஆக நடிச்சனே அதுதான் உண்மையிலேயே எனக்கு சவாலாக இருந்த வே‘ம். ஏன்னா கப்பலோட்டிய அந்தப் பெருமகனாரைப் பார்த்த பழகிய பலர் இன்னைக்கும் நம்மிடையே இருந்து கிட்டு இருக்காங்க. கதைக்குள்ளே வரும் கற்பனை பாத்திரங்களை ஏற்று நடிப்பது சுலபமான காரியம். ஆனால் நமது வாழ்க்கையில் சந்தித்த அதுவும் சமீப காலம் வரைக்கும் வாழ்ந்த ஒரு பெரிய மனிதரை போல நடிக்கிறோம் என்று சொல்கிறபோது அந்த நடிப்பை எல்லோரும் ஏத்துக்கணும். அதிலே மாறுபாடு எழக்கூடாது. பெரியார் அவர்களை போல் நடிக்கிறோம் என்றால் பார்க்கிறவங்க பெரியாரை பார்ப்பது போலவே இருந்தது என்று சொல்லணும். அப்போது தான் நடிப்பு பூரணப்படுத்தப்படும்.

அந்த மாதிரி ஒன்னு தான் இந்த "கப்பலோட்டிய தமிழன்" வா உ சி ஐயா வேஷம். இதில் நான் நடித்ததைப் பார்த்து விட்டு அந்தப் பெரியவர் மகன், "என் அப்பாவையே நேரில் பார்த்தது போல இருந்துச்சு" என்று சொன்னார். எனது வாழ்வில் கிடைத்த மிகப்பெரிய வாழ்த்தாகவும், வெற்றியாகவும் இதை கருதுகிறேன்" என்று நெகிழ்ச்சியுடன் பேட்டியை நிறைவு செய்தார் நடிகர் திலகம்.

"நீ திரும்புகின்ற திசை எல்லாம் அவள் திரு உருவம் தான் தெரியும்"! அந்த திருஉருவ தேவதையாக நடித்தவர் யார்? ... அடுத்த வாரம் அந்த தேவதையை அழைத்து வருகிறேன்.



Personal Prayer To The Holy Spirit

Our Mother of Perpetual Help

Holy Spirit Thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted.


PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!
Twelve Oaks Towns
GreenCity Development Group Inc.
Horizons Modern Towns
Chestnut Hill Developments
JAC Condos
Graywood Developments Ltd. and Phantom Developments
Bartley Towns
Ivylea Towns
Marlin Spring Development and Greybrook Realty Partners
Station 3 Condos
Brookfield Residential
181 East Condos
Stafford Homes Ltd. and Greybrook Realty Partners
Artsy Condos
The Daniels Corporation
King East Estates
Plazacorp Urban Residential Communities
The BoatWorks Towns
Daniels Keelesdale Condos and Towns
The Daniels Corporation
Field House Towns
The Daniels Corporation
High Point Urban Towns
Laurier Homes
Landing Condos Whitby Harbour
Empire Quay House Condos
Empire Communities
28 Eastern Condos
199 Church Condos
CentreCourt Developments Inc. and Parallax Development Corp.
Church St & Dundas St E, Toronto
$537,990 - $1,018,990 | 555 sq ft - 860 sq ft
VIP Sale NOW on
Wenderly Park Towns
Axess Condos
Universal City Condos 4
Chestnut Hill Developments
Maxx Urban Towns 2
Bala Logendralingam
REALTOR®
EXECUTIVE Award
100% Award
RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
Office: 416-287-2222
647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9


Canada VISA
கூடிய விரைவில் உங்கள் கைகளில்
இலங்கையிலுள்ள உங்கள் உறவினர்கள்
CANADAவிற்கு அழைத்து வர எம்மை நாடுங்கள்
STUDENT VISA
ஏற்பாடுகளை இலகுவான முறையில் விரைவில் செய்து தருபவர்கள்.
TOURIST VISA
தனியாகவோ, குடும்பத்தினருடனோ உல்லாசமாக வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.
VISIT VISA
பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.
REFUSED VISA
உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.
BUSINESS VISA
உங்கள் வர்த்தகத்தினை மேலும் பெருக்கும் நோக்கத்துடன் கனடா வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.
10 வருட கால நம்பிக்கையான சேவை
P. Jegan
Director - Flex Institute
+94 777 761 346
flex Institute
Step Towards a Bright Future
6A, Parakumba Place, Colombo 06, Sri Lanka.
www.flexinstitute.lk Flex Institute
flexinstitute04@gmail.com
Hotline: +94 777-761 346
P. Vijay
Director - Flex Institute
+94 777 555 026



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 923



## புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயில் பம்பலப்பிட்டி, கொழும்பு

'' விழிக்குத்துணை திரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத் துணைமுருகா வெனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத்துணை வடி வேலுஞ்செங்கோடன் மயூரமுமே.''

1972 ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டவாறு விழா மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது. மிகச் சிறிய ஆலயமாக அமைந்திருந்த இந்த ஆலயம், இன்று சகலரையும் ஈர்க்கக்கூடிய விதத்தில் அழகிய கட்டிட அமைப்புக்களையும், அருள்மழை பொழியும் அற்புத விக்கிரகங்களையும், கலைத்திறன் மிகு சிற்ப வடிவங்களையும் கொண்டதோடு, வானளாவிய கோபுரங்களையும் கொண்டுள்ளது. மிகச்சிறு மடாலயமாகக் காணப்பட்ட பம்பலப்பிட்டி புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயில், இன்று நவீன கட்டிட அமைப்புக்களைக் கொண்டு, காலத்திற்கேற்ற வகையிலும், மக்களின் தேவைக்கேற்றவகையிலும் அமைந்திருக்கின்றது. ஆகமமுறைகளுக்குரிய அமைவோடு நவீன வசதிகளுடனும் அமைந்த இவ்வாலயத்தினை தலைநகரிலே உருவாக்க, சிந்தனைச்சிற்பி எனப் போற்றப்படும் கட்டிடக்கலைஞர் திரு.வி.எஸ். துரைராஜா அவர்கள் இதயசுத்தியுடன் செயற்பட்டார்.

மனித வாழ்க்கையும், பழக்கவழக்கங்களும் மாறி, பழமையினின்றும் புதுமையை விரும்பும் சமுதாயமாக மக்கள் உருவெடுத்துவரும் இக்காலகட்டத்தில், முன்னேற்றமடைந்துவரும் தலைநகரத்திலே, ஆகமவிதிகளையும் அனுசரித்து, தற்காலத்திலே நகரத்திலே வாழும் பக்தர்களின் பழக்கவழக்கங்களையும் கருத்திற்கொண்டு கொழும்பு பம்பலப்பிட்டியிலுள்ள ஸ்ரீ புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயில் உருவாக்கப்பட்டுள்ளது.

முன்பிருந்த கோயிலின் ஆதிமூலத்திலேயே இப்புதிய கோயிலின் ஆதிமூலத்தையும் அமைத்துள்ளனர். இங்கு எழுந்தருளியிருக்கும் விநாயகர் மேற்குத் திசையைப் பார்த்தவாறு எழுந்தருளியுள்ளார். இதன் காரணமாக வழக்கத்திற்கு மாறாகக் கோயில்வாசல் மேற்குத்திசையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் ஒரு மாடக்கோயிலாகவே அமைக்கப்பட்டுள்ளது. மாடக்கோயில்களுக்குக் கட்டுப்பாடான விதிகள் இல்லை. ஆகவே கற்பக்கிரகத்தை முன்பிருந்த இடத்தையே மையமாக வைத்து அதைச் சுற்றி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. ஆன்மீக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் பஜனைகள், கதாகாலட்சேபங்கள், சொற்பொழிவுகள் ஆகியன நடத்துவதற்கு வசதியாகவும், திருமணவைபவங்களை நிகழ்த்துவதற்கு ஏற்ற விதத்திலும் இந்த ஆலய அமைப்பு காணப்படுகின்றது.

இக்கோயிலின் வாயிலில் மூன்று தளங்களுள்ள கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. வாயில்கதவு தேக்குமரத்தினால் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்டுள்ளது. கோயிலினுள் நுழைந்ததும் வலது பக்கத்திலே இடும்பன் கோயில் உள்ளது. வாயிலின் நேரில் கர்ப்பக்கிரகத்தில் விநாயகர் கோயிலும், அதன் வலது பக்கத்தில் முருகன் கோயிலும், அதன்முன் சிவன், அம்பாள், கோயில்களும் கட்டப்பட்டுள்ளன. வசந்தமண்டபமும், அதன்முன் விசாலமான சபாமண்டபமம் அமைந்துள்ளன. வெளியில் அரசமரத்தடியில் நாகர் கோயிலும், நவக்கிரக கோயிலும் முன்னிருந்த இடங்களிலேயே உள்ளவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

தற்காலத்திலே பல கோயில்கள் உட்புறம் இருட்டாகவும், காற்றோட்டம் அற்ற நிலையிலும் காணப்படுகின்றன. ஆனால் பம்பலப்பிட்டி ஸ்ரீ புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயிலில் வெளிச்சம் வருவதற்கும், காற்றோட்டத்திற்கும் ஏற்றவகையிலே கண்ணாடி யன்னல்களும், ஆகாய வெளிச்சவாயில்களும் மல்லிகை வடிவத்தில் கொங்கிறீற் கிறில்களும் அமைக்கப்பட்டுள்ளன. கோயிலினுள் தீப ஆராதனைகளின்போது எரிக்கப்படும் கற்பூரம், ஊதுவத்தி ஆகியவைகளின் புகை. மேலே எழுந்து வெளியேறுவதற்கு கூரையின் அண்மையில் கிறில்களும் வைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலின் நிலம் சுத்தமாக இருப்பதற்காக விலை உயர்ந்த ரெராசோ கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. பக்தர்கள் மனம்போல அமைதியோடு உட்கார்ந்து இறைவனைத் தியானிக்க பல வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இக்கோயிலின் கூரை, கொங்கிறீற்றால் அமைந்துள்ளது. வெப்பத்தைக் குறைக்கவும், மழைநீர் ஊறி ஒழுகாமலிருக்கவும், ஆறு அங்குல கனத்திற்கு செங்கல் துண்டுகளும், சுண்ணாம்பும், கடுக்காய்ச்சாறும், வெல்லமும் கலந்து சாந்து பூசப்பட்டு, அதன்மேல் சுட்ட களிமண் தட்டுக்களினால் மூடப்பட்டுள்ளது.

இவ்வேலையை தமிழ் நாட்டிலிருந்து செட்டிநாட் கார்ப்பரேசன் நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட கொத்தனார்கள் செய்து முடித்துள்ளார்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக உறுதியுடன் நிலைத்திருக்க வேண்டும் என்ற நோக்குடன் இக்கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இக் கோயிலினுள் கட்டப்பட்டுள்ள தூண்கள், எட்டுப் பொதிகளுடன் காணப்படுகின்றது. இவ்வகையான தூண்கள் இங்குதான் முதல் தடவையாகக் கட்டப்பட்டுள்ளது. இத் தூண்களைச் சிற்பி காண்டீபன் என்பவர் உருவாக்கியுள்ளார். கோபுரத்திலும், விமானத்திலும் காணப்படும் சிலைகளை, சிற்பி சக்திவேலு என்பவர் படைத்துள்ளார். இவ்விரு கலைஞர்களும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். ஈழத்திலே நிலவிய உள்நாட்டு நிலைமைகள் காரணமாக, தமிழ்நாட்டிலிருந்து சிற்பிகள் ஈழம் வரத் தயக்கம் தெரிவித்த காரணத்தினால், இலங்கையைச் சேர்ந்த சிற்பிகள், ஸ்தபதி மகேஸ்வரனின் தலைமையில் இக்கட்டிடத்திற்கு புராதன கலைவண்ணம் கொடுத்துள்ளனர்.

*வளரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உன்னது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077




ALL DEBT SOLUTIONS
CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

KANAGAAMBIKAI

PAWN BROKERS





25 வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

# குறுக்கும் நெடுக்குமாக 13 ஏ ஒழித்தல்

## - ஒஸ்ரின் பெர்னாந்து

இராசபக்ச அரசு கடந்த செப்தெம்பர் முதல் வாரத்தில் ஒரு புதிய யாப்பை வரைவதற்கு ஒரு நிபுணர் குழுவை நியமித்துள்ளது. ஒன்பது பேர் கொண்ட இந்தக் குழுவில் 7 சிங்களவர், ஒரு தமிழர், ஒரு முஸ்லிம் இடம் பெற்றுள்ளார்கள்.

சனாதிபதி சட்டத்தரணி ரோமே‘ டி சில்வா (தலைவர்)
சனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன,
சனாதிபதி சட்டத்தரணி மனோகாரா டி சில்வா,
சனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவா ஜெயவர்த்தன
பேராசிரியர் நசீமா கமால்தீன்
கலாநிதி ஏ. சர்வேஸ்வரன்
சனாதிபதி சட்டத்தரணி சமந்தா இரத்வத்த
பேராசிரியர் வசந்தா செனெவிரத்தின
பேராசிரியர் ஜி.எச்.பீரிஸ்.

அரசாங்கம் ஓர் ஆண்டுக்குள் ஒரு புதிய யாப்பை உருவாக்கிவிட தீர்மானித்துள்ளது. இந்த நிபுணர் குழுவில் இடம்பெற்றிருப்பவர்களில் பெரும்பான்மையினர் தீவிர சிங்கள - பவுத்த தேசிய கடும்போக்காளர்கள் ஆவர். குறிப்பாக அதன் தலைவர் சனாதிபதி சட்டத்தரணி ரோமேஷ் டி சில்வா, சனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன, சனாதிபதி சட்டத்தரணி மனோகாரா டி சில்வா ஆகிய மூவரும் அப்படியானவர்கள்.

இப்போது நடைமுறையில் இருக்கும் யாப்பு 1978 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களின் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட யாப்பாகும். அதற்கு முன்னர் 1947 இல் கொண்டுவரப்பட்ட சோல்பரி யாப்பு 1972 இல் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க கொண்டு வந்த யாப்பு மூலம் நீக்கப்பட்டது. எனவே இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் இப்போது எடுத்துள்ள முயற்சி நான்காவது தடவை ஆகும்.

சோல்பரி யாப்பு 24 ஆண்டுகள் நீடித்தது. லங்கா என்ற பெயரை ஸ்ரீ லங்கா என மாற்றி, சிறுபான்மையரது பாதுகாப்புக்கு கொண்டுவரப்பட்ட விதி 29 (1) ஒழித்து, பவுத்தத்துக்கு முதன்மை இடம் கொடுத்த 1972 ஆண்டில் இயற்றப்பட்ட யாப்பு 6 ஆண்டுகள் மட்டும் உயிர் வாழ்ந்தது. 1978 இல் இயற்றப்பட்ட யாப்பு நாடாளுமன்ற சனநாயகத்துக்குப் பதில் நிறைவேற்றதிகாரம் படைத்த சனாதிபதி முறைமையை கொண்டு வந்தது. இப்போது அதன் ஆயுளும் முடிவுக்கு வர இருக்கிறது.

மேற்கூறியவற்றை விட அற்ப ஆயுளில் உயிரை விட்ட அரசியல் யாப்பு வரைவுகளும் உண்டு. இனச் சிக்கலுக்கு தீர்வு காணும் பொருட்டு 1991 இல் மங்கள முனசிங்க தலைமையில் நியமிக்கப்பட்ட 45 பேர் அடங்கிய தெரிவுக் குழு மொத்தம் 49 முறை கூடி 1993 ஆம் ஆண்டு ஒரு இடைக்கால அறிக்கையை வெளியிட்டது. அதில் பின்வரும் முன்மொழிவுகள் காணப்பட்டன.

1. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இரண்டு தனித்தனி நிருவாக அலகுகளை நிறுவுதல்
2. இந்திய அரசியலமைப்பில் காணப்படுவது போன்று அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை ஏற்றுக்கொள்வது (மாநில அரசுகளைக் கலைப்பதற்கும் சனாதிபதி ஆட்சியை கொண்டுவருவதற்கும் இந்தியாவின் மத்திய அரசு அதிகாரங்களைத் வைத்துள்ளது)




3. 13 வது திருத்தத்தின் பட்டியல் ஐஐஐ இல் (ஒரே நேரத்தில் பட்டியல்) அதிக அதிகாரங்களை பகிர்ந்தளித்தல் அல்லது அந்தப் பட்டியலை மொத்தமாக நீக்குதல்.

இருந்தும் இனச் சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கு எடுத்த முயற்சி வெற்றி பெறவில்லை. இதற்கு முன்னர் ஐந்து முறை மட்டுமே அதிகபட்சமான தீர்வுக்குச் சிங்கள ஆட்சியாளர்கள் இறங்கி வந்திருந்தார்கள்.

1. 1987 இல் எழுதப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கை காரணமாக உருவான 13 ஆவது யாப்புத் திருத்தம்.
2. 2000 ஆம் ஆண்டு சனாதிபதி சந்திரிகாவால் கொண்டு வரப்பட்ட இலங்கை பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற முக்கிய இணைப்பாட்சி கோட்பாட்டினைக் கொண்டதும் தமிழ்மக்களுக்கு உச்சபட்ச அதிகாரத்தை வழங்கும் தீர்வுத் திட்டம். இந்த அரசியலமைப்பை ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்றத்தில் தீ வைத்துக் கொழுத்திய போதும், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் தமிழர் விடுதலைக் கூட்டணி அதற்கு எதிராக வாக்களிக்காததால் அது தோல்வியுற்றது.
3. 2002 டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சுகளின் முடிவில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தொடக்க ஏற்பாடாகத் தங்களுக்குள் ஏற்பட்ட இணக்கம் குறித்து இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் வெளியிட்ட கூட்டு அறிவிப்பு. அதில் குறிப்பிட்ட “உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகத்தில், ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி ஆட்சிமுறை தழுவிய தீர்வு ஒன்றை ஆராய்ந்து பார்ப்பதற்கு இரு தரப்பிலும் இணக்கம் காணப்பட்டது.
4. 2005 ஆம் ஆண்டில் இரணில் விக்ரமசிங்க சனாதிபதியாக வந்திருந்தால் ஒஸ்லோ புரிந்துணர்வு அடிப்படையில் இணைப்பாட்சி அரசியல் யாப்பு உருவாக்குவதற்கு வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால் சனாதிபதி தேர்தலை வி.புலிகள் புறக்கணித்த காரணத்தினால் அந்த வாய்ப்பு தவறிப் போய்விட்டது.
5. 9 மார்ச், 2016 இல் நாடாளுமன்றத்தை ஒரு அரசியல் நிர்ணய சபையாக மாற்றும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. அதன் முதலாவது அமர்வு 06 ஏப்ரில், 2016 அன்று இடம்பெற்றது. புதிய அரசியலமைப்பை வரையும் நாடாளுமன்ற வழிப்படுத்தும் குழுவுக்கு இரணில் தலைவராக நியமிக்கப்பட்டார். வழிப்படுத்தும் குழுவுக்குப் பொறுப்பாக கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ணவும், எம் ஏ சுமந்திரனும் நியமிக்கப்பட்டார்கள். இந்த வழிநடத்தும் குழு மொத்தம் 73 தடதை கூடி விவாதித்தது. 12 முக்கிய துறைகள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டது. ஆறு உப குழுக்கள் தமது அறிக்கைகளை 19 நொவெம்பர், 2016 இல் சமர்ப்பித்தன. வழிப்படுத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை 21 செப்தெம்பர், 2017 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

அதன் பின்னர் சனாதிபதி சிறிசேனாவுக்கும் பிரதமர் இரணில் விக்கிரமசிங்க இருவருக்கும் இடையில் ஒரு பனிப்போர் தொடங்கியது. அதன் உச்சகட்டமாக 21 ஒக்தோபர் 2018 இல் பிரதமர் விக்கிரமசிங்க, சனாதிபதி சிறிசேனாவினால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவரது இடத்தில் மகிந்த இராசபக்ச பிரதமராக நியமிக்கப்பட்டார்.



அதே ஆண்டு 09 நொவெம்பர் இல் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. இவற்றை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ன. உயர் நீதிமன்றம் இந்த நடவடிக்கைகள் அரசியல் யாப்பு அடிப்படையில் செல்லுபடியற்றது எனத் தீர்ப்பளித்தது. மீண்டும் இரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். ஆனால் 16 நொவெம்பர், 2019 அன்று நடந்த சனாதிபதி தேர்தலில் கோத்தபய இராசபக்ச வெற்றி அடைந்ததை அடுத்து அரசியல் நிலைமை தலைகீழாக மாறியது.

அரசியலமைப்பு உருவாக்கம் தடைப் பட்டது. 19 ஆவது சட்ட திருத்தம் மின்னல் வேகத்தில் கொண்டு வரப்பட்டு நான்கு மாதங்களில் நிறைவேற்றப்பட்டது. அதே போல் யாப்பு உருவாக்கத்தில் அதேயளவு வேகம், அவசரம் காட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் காட்டப்படவில்லை. அதனால் இலவு காத்த கிளியின் கதைமாதிரி அமைந்துவிட்டது. அது மட்டுமல்ல பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்பதற்கு ஒப்ப 13 ஏ திருத்தத்தை முற்றாக ஒழிக்க சிங்கள - பவுத்த தேசியவாதிகள் கடும் போர் தொடுத்துள்ளார்கள்.

இது தொடர்பாக ஒஸ்ரின் பெர்னாந்து அவர்கள் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அந்தக் கட்டுரை ஐ லாண்ட நாளேடு உட்பட (https://island.lk/crisscrossing-13a-abolition/9 பல ஊடகங்களில் கடந்த 13 நொவேம்பர், 2020 அன்று வெளிவந்தது.

ஒஸ்ரின் பெர்னாந்து இலங்கை நிருவாக சேவையில் நீண்ட காலம் பணியாற்றியவர். தற்சமயம் புது தில்லியில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக இருக்கிறார். அதற்கு முன்னர் முன்னாள் சனாதிபதி சிறிசேனாவின் செயலாளராகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் கிழக்கு மாகாண ஆளுநராகவும் பதவி வகித்தவர். முற்போக்குச் சிந்தனையுடையவர்.

கட்டுரையில் தலைப்பு Crisscrossing 13A Abolition (குறுக்கும் நெடுக்குமாக 13 ஏ ஒழித்தல்) என்பதாகும்.

2017 ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டணி (ததேகூ) தலைவர் ஆர். சம்பந்தன் ஆற்றிய உரையை நான் அண்மையில் படித்தேன். அவரது சொற்பொழிவு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை (13 ஏ) ஆதரிப்பதாக இருந்தது. அவரது புத்திசாலித்தனமான வாதங்களைப் பாராட்டுகிறேன். 13ஏ சம்பந்தமாக அவரது சிந்தனையோடு நான் உடன்படுகிறேன். 13 ஏக்கு நான் ஆதரவு திரட்டப் போவதில்லை. ஆனால் மறந்துவிட்ட ஒன்றுடன் ஒன்றான குறிப்புகளுடன் விவாதத்தை விரிவுபடுத்த விரும்புகிறேன். 13A இன் நிலை.

1987 இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையின் விளைவாக அதிகாரப் பகிர்வு எங்கள் மீது திணிக்கப்பட்டது. பின்னர், சில குழுக்கள் இந்த உடன்படிக்கையையும் மற்றும் 13ஏ யையும் நிராகரித்தன. இன்றுவரை அவர்களின் நிலை மாறாமல் உள்ளது.

தொடக்கத்தில், மோதல் போக்கைக் குறைப்பதற்கு அதிகாரப் பகிர்வு அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாட்டின் ஒரு பகுதி பயங்கரவாதிகள் கட்டுப்பாட்டில் இருந்த நேரத்தில் 13ஏ சட்டப்பூர்வமாக்கப்பட்டது என்று சிலர் வாதிடலாம். ஆனால், தற்போதைய அரசாங்கம் பழைய பாதையில் செல்ல வேண்டிய அவசியமில்லை.

ததேகூ அரசியல்வாதிகள் பயங்கரவாதம் இன்று இல்லாவிட்டாலும் மோதலுக்கான காரணங்கள் மற்றும் அதன் விளைவுகள் உள்ளன என்று வாதிடுகிறார்கள்.

மாகாண சபைகளின் செயல்திறன் பல விடயங்களில் திருப்திகரமாக இல்லை. சில விமர்சகர்கள் அவற்றை ‘வெள்ளை யானைகள்’ என்று வருணிக்கிறார்கள். இதுபோன்ற தீவிர விமர்சனங்களை நான் ஆதரிக்கவில்லை, ஏனெனில் மாகாண சபைகளின் பலவீனத்திற்கு ஒரு காரணம் ‘மத்திய - மாகாண ஒத்துழைப்பு’ இல்லாதது. பல தசாப்தங்களுக்கு முன்னர், பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மாகாணங்களுக்கு நிதி, தாபன மேலாண்மை மற்றும் சட்டத்தை உருவாக்குவதற்கு அதிகாரம் தேவை என்று வலியுறுத்தினார். இன்றுவரை, இந்த விடயங்கள் சிக்கல்களாகவே இருக்கின்றன.

அதிகாரப் பகிர்வில் உள்ளார்ந்த தவறான வரிகளைக் காணும் சிலர் கருத்து, உள்ளடக்கம் மற்றும் அரசியல் ஆகியவற்றின் அடிப்படையில் மாககாணங்களை எதிர்க்கின்றனர். பொலீஸ் மற்றும் நில அதிகாரங்களை பகிர்ந்தளித்தல், மாகாணங்களை ஒன்றிணைத்தல் போன்றவை இறையாண்மையை மீறுவதாகவும், தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிப்பதாகவும் அவர்கள் வாதிடுகின்றனர்.

13ஏ ஐ ஒழிப்பதற்கான கடுங்கோபம் கலந்த அழைப்பு அரசியல்வாதிகளிடமிருந்தும் ஊடகவியலாளர்களிடமிருந்தும், பிக்குகளில் ஒரு பகுதியினரிடம் இருந்தும் வருகிறது. புதிய அரசியலமைப்பை உருவாக்கும் போது மாகாணங்களின் வளர்ச்சியைத் தடுக்க சில செயல்பாடுகளை (எ.கா. நிலம் மற்றும் பொலீஸ் அதிகாரங்கள்) திரும்பப் பெறுவது மற்றொரு மாற்று முன்மொழிவு ஆகும். *(வளரும்)*

# இவ்வார ராசிபலன்

**04-12-2020 வெள்ளி தொடக்கம் 10-12-2020 வியாழன் வரையும்**




**மேஷம்:** அற்புதமான ஆதாயமும் நிச்சயமான நிதியும் பக்குவமாக சேரக்கூடிய வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: ஸ்ரீ ராஜவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** ஆனந்தமும், ஆதாயமும் அமைதியும் மிகுதியாகக் கூடிய அற்புதமான வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும்.பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நந்தா தேவி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மிதுனம்:** சவாலான விஷயங்களை சமாளித்து சாதனை நிகழ்த்தக்கூடிய போதனையான வாரம். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: புட்டுச் சொக்கநாதர், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** பழக்கமான நண்கர்களால் கலக்கமான சூழ்நிலைகள் விலகும் வாரம். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை கூடும்.புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். உற்சாகம் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். மங்கல செய்தியால் மனம் மகிழும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வெக்காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**சிம்மம்:** இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாய் அமையக் கூடிய நல்ல வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும்.பேச்சில் கனிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: திருமலைராயர், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**கன்னி:** நாற்காலிக் கனவுகள் நனவாகக் கூடிய நல்ல வாரம். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். மேன்மையான நாள். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஆதிவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**துலாம்:** பரபரப்பே இல்லாமல் பணவரவு பெருகக்கூடிய பக்குவமான வாரம். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். பணியில் உயர்வு கிட்டும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். விவேகமான வாரம். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹரிஹராசுதன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**விருச்சிகம்:** உழைப்பால் மதிப்பும் உங்களால் சிறப்பும் சேரக்கூடிய பொறுப்பான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சக்தி பாலகன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**தனுசு:** இதயத்தில் உற்சாகமும், இல்லத்தில் சந்தோஷமும் இனிமையாய் மலரக்கூடிய அற்புதமான வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சந்தான லட்சுமிகணபதி, அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**மகரம்:** கைமேல் காசும், கௌரவ வாய்ப்பும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
வழிபடவேண்டியதெய்வம்: மணகுழ பகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** ஆதாயம் மிகுதியாகி ஆதாரம் வலுவடையக் கூடிய அற்புதமான வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரித்து குடும்பம் ஒன்று சேரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தாய்முகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**மீனம்:** பிரியமானவர்களையும், பிரபல்யமானவர்களையும் சந்திக்கக் கூடிய சந்தோஷமான வாரம். மனம் மகிழும் நாள். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். திறமைகள் அதிகமாகும். இன்னல்கள் அகலும். கடன் தீரும். ஆக்கம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். வியாபாரத்தில் கவனம் தேவை. தன வரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். பழைய நட்பு பலன் தரும். உறவினரால் பாதகம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சிங்கப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்



PAWN BROKERING
பழைய பவுண்கள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளப்படும்
Cash Point



துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.
Cash Point
3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000

# கனடா ரொரன்ரோ மாநகரில் நடைபெற்ற இந்து பாரம்பரிய மாதக் கொண்டாட்டங்கள்

# HINDU HERITAGE MONTH CELEBRATIONS – TORONTO



The Toronto Kailasa Nithyananda Mediation Academy together with the Hindu Federation and varied denominations of Hindu temples of GTA held its 2020 Hindu Heritage month virtual celebrations on Saturday November 28th.

By proclaiming the month of November as Hindu Heritage Month, the Government of Ontario recognizes the important contributions that Hindu Canadians have made to Ontario's social, economic, political and cultural fabric.

The event started with the temple Aarti to lord Ganesha which signifies all Hindu auspicious functions commencing with the lighting of the lamp, which is often maintained right" through the occasion. Light symbolizes knowledge, and removes ignorance. Knowledge removes ignorance just as light removes darkness. Also knowledge is a lasting inner wealth by which all outer achievements can be accomplished. Hence we light the lamp to bow down to knowledge as the greatest of all forms of wealth.




Aarti to the main deities of the participating temples were also telecasted followed by the message and wishes of the chief priests of each participating temple.

The event comprised of 2 major segments, one being the interview with a panel of youth and the second being the panel discussion with Hindu leaders and Parliamentarians.

Eight children ages 6 to 14 together with a group of Hindu adult educators from Ontario and Alberta, Canada were part of the youth panel which was very inspiring and the youth addressed the questions of what was their perception of Hinduism, how did they practice and celebrate Hinduism, what was their favourite Hindu festival and what they enjoyed about it. The adult educators addressed about what does it mean to be a Hindu as an educator in Canada and how would they showcase being a Hindu to a non-Hindu community and what actions were being taken by the school boards to bring awareness to various religious groups and their festivals.

The second segment was the panel discussion with Hindu leaders and Parliamentarians who dove deep into discussing the contributions of Hinduism in Canada and how to preserve the Hindu heritage for future generations. In his address, Pandit Roopnauth Sharma the president of the Hindu Federation said that Hinduism should not be preserved but should be made alive. He also re-iterated the importance of educating, clarifying, debunking being inclusive for children and others is clearing the way to propagation of our heritage. Sri Chaithanyananda the founder of Sri Rajrajeswari Temple explained the importance of educating the next generation the meanings of Rituals, Mantras, Shastras, the Architecture and designs behind constructing temples. Ma Nithya Premathma Swami, a sanyasi of the Nithyananda order pointed that we should be standing up, going back and connecting to the source and following the vedas, agamas and the scriptures which are highly scientific and living it practically every day is the only way to go deep and experience the Hindu values and live life blissfully. Sri Logenthiralingam, Chief Editor of Canada Uthayan Newspaper requested the Hindu leaders to create an environment for the next generation to actively participate in religious events, discussions and activities to expand their horizons to Hinduism rather than limiting them to what they learn only at home and schools.

The highlight of the event was the live satsang from the Supreme Pontiff of Hinduism, Jagatguru Mahasannidhanam, His Divine Holiness Bhagavan Nithyananda Paramashivam. Bhagavan in his satsang thanked the Ontario Government for declaring the month of November as the Hindu Heritage month and went on to thank the Hindu Federation for organizing the event and all participants individually for their participation and their valuable contribution at the event.

In his message Bhagavan stressed that Hinduism is all about life positivity and Hindus are the richest ethnic minority in the countries they live in and are extremely contributing to their societies. He urged the Hindu leaders, organizations and temples in Canada to unite and work towards a common goal to preserve Hinduism and contribute to the nation.

The following temples participated and enriched the celebrations:
1. Kailasa in Toronto
2. Sri Varasiththi Vinayagar Temple (Scarborough)
3. Sri Siva Satyanārāyana Swāmi Temple (Mississauga)
4. Katpaga Vinayagar temple (Brampton)
5. Bhuvaneswari Amman Temple (Brampton)
6. Sri Nagapooshani Amman Temple (Scarborough)
7. Sri Selvavinayagar temple (Scarborough)
8. Grand Prairie Hindu Temple (Alberta)
9. Canada Kanthaswamy Temple (Scarborough)
10. Sri Siva Vishnu Temple (North York)
11. Sri Nallur Kanthaswami temple (Scarborough)



Youth Participants of the Event Panel:
1. Vaahai Abimanyu
2. Raghavi Gnanachandran
3. Anupriya Nithyanandan
4. Sailakshmi Kanagaretnam
5. Eehan Abimanyu
6. Maravan Gnanachandran
7. Ma Nithya Shankarathmananda
8. Shaithiri Thirun

Adult Panelists of Youth Event:
1. Parthi Kandavel ( TDSB Trustee - Ward 18 )
2. Dr. Anu Sriskandarajah ( Professor in the Child and youth Studies, and TDSB Trustee - Ward 22 )
3. Sivatharshi Yoganathan ( Secondary Teacher, ESL Department Head, TDSB, H.B.Sc, B.Ed)
4. Tetyana Lytviak ( Teacher at Calgary board of Education)

Hindu Leaders Panel:
1. Pandit Roopnauth Sharma (President of the Hindu Federation and Spiritual Leader of Mississauga's Ram Mandir)
2. Sri Chaithanyananda (Founder and Spiritual Leader of Sri Rajarajeswari Temple, NY)
3. Sri Logan Logendralingam (Chief Editor at Canada Uthayan - Canada's Leading Tamil Newspaper)
4. Sri Samy Appadurai – Moderator (Community Activist, Writer, Speaker)
5. Ma Nithya Jnanatmananda Swami (Masters in Computer Science, Sanyasi of Nithyanada Order)
6. Ma Nithya Premathma Swami (Masters in electrical & computer engineering, Sanyasi of Nithyananda Order)

Parliamentarian Panel:
1. Salma Zahid , Member of Parliament
2. Ruby Sahota, Member of Parliament

**வீணாவின் கிறுக்கல்**

**அழகாய்** அடக்கமாய் வீசும்
தென்றல் காற்று
**ஆக்ரோசமாய்** வீசும் போது
புயலாகிறது,
**இனிமையாய்** பதுமையாய்
பேசும் பெண்
**ஈவு** இரக்கமின்றி துன்புறுத்தப்படும்
போது அவளே
**உலகின்** மிகப்பெறிய சூறாவழியும்
ஆகின்றாள்
**ஊக்கமளித்து** உற்சாகப்படுத்துகையில்
இமையம் தொடுகின்றாள்
**எவ்வளவு** துன்பங்கள் மனதோடு
இருந்தாலும்
**ஏலனமாக** மற்றவர் பார்வை
இருந்தாலும்
**ஐயப்படாமல்** கர்வச்சிரிப்புடன்
இருப்பாள்
**ஒய்யார** வாழ்க்கை வாழ்ந்தாலும்
**ஓட்டு** வீட்டில் வளர்ந்தாலும்
**ஔடதமாய்** தம்மை சுற்றி
இருப்பவர்களை காப்பாள்
**அஃதே** பெண்மையின் சிறப்பான
குணமாகும்.

# அன்பின் தொனி - 589

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**தேவன் எங்களை ஆசீர்வதிப்பார்**

தேவனே, பூமியில் உம்முடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய், தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து, உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும். தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக, சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக. தேவரீர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்த்து, பூமியிலுள்ள ஜாதிகளை நடத்துவீர், ஆதலால் ஜாதிகள் சந்தோித்து, கெம்பீரத் தோடே மகிழக்கடவர்கள். தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக, சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக. பூமி தன் பலனைத் தரும், தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார். தேவன் எங்களை ஆசீர்வதிப்பார், பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும். **- சங்கீதம் 67: 1-7**

**தேவனே, நீர் என் புத்தியீனத்தை அறிந்திருக்கிறீர்**

தேவனே, என்னை இரட்சியும், வெள்ளங்கள் என் ஆத்துமாமட்டும் பெருகிவருகிறது. ஆழமான உளையில் அமிழ்ந் திருக்கிறேன், நிற்க நிலையில்லை, நிலையாத ஜலத்தில் ஆழிந்திருக்கிறேன், வெள்ளங்கள் என்மேல் புரண்டுபோகிறது. நான் கூப்பிடுகிறதினால் இளைத்தேன், என் தொண்டை வறண்டுபோயிற்று, என் தேவனுக்கு நான் காத்திருக்கையால், என் கண்கள் பூத்துப்போயிற்று. நிமித்தமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என் தலைமயிரிலும் அதிக மாயிருக்கிறார்கள், வீணாக எனக்குச் சத்துருக்களாகி என்னைச் சங்கரிக்கவேண்டுமென்றிருக்கிறவர்கள் பலத்திருக்கிறார்கள், நான் எடுத்துக்கொள்ளாததை நான் கொடுக்க வேண்டியதாயிற்று. தேவனே, நீர் என் புத்தியீனத்தை அறிந்திருக்கிறீர், என் குற்றங்கள் உமக்கு மறைந்திருக்கவில்லை. சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவரே, உமக்காகக் காத்திருக்கிறவர்கள் என்னிமித்தம் வெட்கப்பட்டுப்போகாதிருப்பார்களாக, இஸ்ரவேலின் தேவனே, உம்மைத் தேடுகிறவர்கள் என்னிமித்தம் நாணமடையாதிருப்பார்களாக. உமதுநிமித்தம் நிந்தையைச் சகித்தேன், இலச்சை என் முகத்தை மூடிற்று. என் சகோதரருக்கு வேற்று மனுஷனும், என் தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன். உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது, உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது. என் ஆத்துமா வாடும்படி உபவாசித்து அழுதேன், அதுவும் எனக்கு நிந்தையாய் முடிந்தது. இரட்டை என் உடுப்பாக்கினேன், அப்பொழுதும் அவர்களுக்குப் பழமொழியானேன். வாசலில் உட்கார்ந்திருக்கிறவர்கள் எனக்கு விரோதமாய்ப் பேசுகிறார்கள், மதுபானம்பண்ணுகிறவர்களின் பாடலானேன். ஆனாலும் கர்த்தாவே, அநுக்கிரககாலத்திலே உம்மை நோக்கி விண்ணப்பஞ் செய்கிறேன், தேவனே, உமது மிகுந்த கிருபையினாலும் உமது இரட்சிப்பின் சத்தியத்தினாலும் எனக்குச் செவிகொடுத்தருளும். நான் அமிழ்ந்திப்போகாதபடிக்குச் சேற்றினின்று என்னைத் தூக்கிவிடும், என்னைப் பகைக்கிறவர்களினின்றும் நிலையாத ஜலத்தினின்றும் நான் நீங்கும் படி செய்யும். ஜலப்பிரவாகங்கள் என்மேல் புரளாமலும், ஆழம் என்னை விழுங்காமலும், பாதாளம் என்மேல் தன் வாயை அடைத்துக்கொள்ளாமலும் இருப்பதாக. கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும், உம்முடைய தயை நலமாயிருக்கிறது, உமது உருக்கமான இரக்கங்களின்படி என்னைக் கடாட்சித்தருளும். உமது முகத்தை உமது அடி யேனுக்கு மறையாதேயும், நான் வியாகுலப்படுகிறேன், எனக்குத் தீவிரமாய்ச் செவிகொடுத்தருளும். நீர் என் ஆத்துமா வினிடத்தில் வந்து அதை விடுதலைபண்ணும், என் சத்துருக்களினிமித்தம் என்னை மீட்டுவிடும். **- சங்கீதம் 69: 1-18**

**கர்த்தர் எளியவர்களின் விண்ணப்பத்தைக் கேட்கிறார்**

தேவரீர் என் நிந்தையையும் என் வெட்கத்தையும் என் அவமானத்தையும் அறிந்திருக்கிறீர், என் சத்துருக்கள் எல்லாரும் உமக்கு முன்பாக இருக்கிறார்கள். நிந்தை என் இருதயத்தைப்பிளந்தது, நான் மிகவும் வேதனைப்படுகிறேன், எனக்காக பரிதபிக்கிறவனுண்டோ என்று காத்திருந்தேன், ஒருவனும் இல்லை, தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், ஒருவனையும் காணேன். என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள். அவர்களுடைய பந்தி அவர்களுக்குக் கண்ணியும், அவர்களுடைய செல்வம் அவர்களுக்கு வலையுமாயிருக்கக்கடவது. அவர்களுடைய கண்கள் காணாதபடி அந்தகாரப்படக்கடவது, அவர்கள் இடுப்புகளை எப்போதும் தள்ளாடப்பண்ணும். உம்முடைய உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றும், உம்முடைய கோபாக்கினி அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதாக. அவர்கள் வாசஸ்தலம் பாழாகக்கடவது, அவர்களுடைய கூடாரங்களில் குடியில்லாமற்போவதாக. தேவரீர் அடித்தவனை அவர்கள் துன்பப்படுத்தி, நீர் காயப்படுத்தினவர்களை நோகப் பேசுகிறார்களே. அக்கிரமத்தின் மேல் அக்கிரமத்தை அவர்கள்மேல் சுமத்தும், அவர்கள் உமது நீதிக்கு வந்தெட்டாதிருப்பார்களாக. ஜீவபுஸ்தகத்திலிருக்கிற அவர்கள்பேர் கிறுக்கப்பட்டுப்போவதாக, நீதிமான்கள் பேரோடே அவர்கள் பேர் எழுதப்படாதிருப்பதாக. நானே சிறுமையும் துயரமுமுள்ளவன், தேவனே, உம்முடைய இரட்சிப்பு எனக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக. தேவனுடைய நாமத்தைப் பாட்டினால் துதித்து, அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமைப்படுத்துவேன். கொம்பும் விரிகுளம்புமுள்ளகாளை யெருதைப்பார்க்கிலும், இதுவே கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும். சாந்தகுணமுள்ளவர்கள் இதைக்கண்டு சந்தோஷப்படுவார்கள், தேவனைத் தேடுகிறவர்களே, உங்கள் இருதயம் வாழும். கர்த்தர் எளியவர்களின் விண்ணப்பத்தைக் கேட்கிறார், கட்டுண்ட தம்முடையவர்களை அவர் புறக்கணியார். வானமும் பூமியும் சமுத்திரங்களும் அவைகளில் சஞ்சரிக்கிறயாவும் அவரைத் துதிக்கக்கடவது. தேவன் சீயோனை இரட்சித்து, யூதாவின் பட்டணங்களைக்கட்டுவார், அப்பொழுது அங்கே குடியிருந்து அதைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். அவருடைய ஊழியக்காரரின் சந்ததியார் அதைச் சுதந்தரித் துக்கொள்வார்கள், அவருடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் அதில் வாசமாயிருப்பார்கள். **- சங்கீதம் 69: 19-36**

தேவனே, என்னை விடுவியும், கர்த்தாவே, எனக்குச் சகாயஞ்செய்யத்தீவிரியும். என் பிராணனை வாங்கத்தேடுகிறவர்கள் வெட்கி நாணுவார்களாக, எனக்குத் தீங்குவரும்படி விரும்புகிறவர்கள் பின்னிட்டுத் திரும்பி இலச்சையடைவார்களாக. ஆ ஆ, என்பவர்கள் தாங்கள் அடையும் வெட்கத்தினால் பின்னிட்டுப்போவார்களாக. உம்மைத் தேடுகிற யாவரும் உம்மில் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக, உமது இரட்சிப்பில் பிரியப்படுகிறவர்கள் தேவனுக்கு மகிமையுண்டாவதாக என்று எப்பொழுதும் சொல்வார்களாக. நானோ சிறுமையும் எளிமையுமானவன்ஞ தேவனே, என்னிடத்தில் தீவி ரமாய் வாரும்: நீரே என் துணையும் என்னை விடுவிக்கிறவருமானவர், கர்த்தாவே, தாமதியாதேயும். **- சங்கீதம் 70: 1-5**

*தொடரும்...*



# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் தேவபாலன் தர்மேந்திரா

RH King Scarborough பழைய உயர்தர வகுப்பு மாணவர்,
University of Toronto Scarborough பழைய மாணவர்,
TD Bank உதவி முகாமையாளர், Financial Advisor

எங்கள் அன்புத் தம்பி தர்மாவே!
நீ எங்களை விட்டுச் சென்று ஒரு வருடம் ஆனதடா!
எங்களாலேயே உன்னை மறக்க முடியவில்லை
உன் பெற்றவர்களும் உடன் பிறப்புகளும் உன்னை எப்படியடா மறப்பார்கள்!
நீ வாழ்ந்தது போதும் என்று உன்னைப் படைத்தவனிடமே சென்று விட்டாய்
கலங்கிய இதயத்தை எங்களுக்கு தந்துவிட்டு காணாமல் போனாயடா
நீ மீண்டும் பிறந்து எம்மிடம் ஓடி வாடா!

உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனிடம் வேண்டுகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
ராசா மாமா குடும்பத்தினர்
905-683-2474 Ajax

Life Insurance
Don't think twice
Life Insurance
Critical Illness
Disability
Investments
Group Benefits
RRSP / RESP
iNFORCE LIFe Financial Services Inc.
RESP Registered Education Saving Plans
40% - 20% Government Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் சுடர் வீசும் வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
(BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
PARK PLAZA
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1287 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 4, 2020

# ஒன்றாரியோ கன்சர்வேட்டிவ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஸ்கார்பரோ குடும்பங்களை நிர்க்கதியாக்கி விட்டனர் என்கிறது என்டிபி





ஒன்றாரியோவில் ஆட்சியில் உள்ள கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் ஸ்கார்பரோவில் பல தொகுதிகளை பிரதிநிதித்துவம் செய்யும் பமாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள், கோவிட்-19 ஐ எதிர்த்துப் போராடவல்ல முதலீடுகளை செய்யும்படி டக் ஃபோர்டைக் கேட்பதற்கு முன்வரவில்லை. அதை மறுக்கின்றார்கள்.

பேரிடரின் கோரப்பிடியில் சிக்கித் தவித்து நிற்கும் தம் சமூகத்தினர்க்கு உங்கள் அரசாங்கத்தின் ஆதரவு தேவை என்றும், கட்சி விசுவாசத்தை ஒரு புறம் வைத்துவிட்டு அவர்களுடன் ஒன்றாகச் சேர்ந்து நில்லுங்கள்''. இவ்வாறு என் டி பி கட்சியின் ஸ்கார்பரோ தெற்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் டொலி பேகம், ஸ்கார்பரோவிலுள்ள ஆளும் கட்சி மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

(உள்ளே விபரமான செய்தி 6ம் பக்கத்தில்)

# கனடா ரொரன்ரோ மாநகரில் நடைபெற்ற இந்து பாரம்பரிய மாதக் கொண்டாட்டங்கள்

கனடாவில் இயங்கிவரும் ரொரன்ரோ கைலாச நித்தியானந்த தியானக் கல்வி நிறுவனமும் ஒன்றாரியோ இந்து சம்மேளனமும் ரொரொன்ரோ பெரும்பாகத்தில் இயங்கிவரும் பல இந்து ஆலயங்களும் இணைந்து நடத்திய 'இந்து பாராம்பரிய மாதக் கொண்டாட்டங்கள்' கடந்த நவம்பர் 28ம் திகதியன்று இணையவழி ஊடாக நடைபெற்றன.

கனடாவின் ஒன்றாரியோ மாகாணமானது அண்மையில் நவம்பர் மாதத்தை இந்து பாரம்பரிய மாதமாகப் பிரகடணம் செய்தது தொடர்பான மகிழ்ச்சியைக் கொண்டாடும் முகமாகவே இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

இணையவழி விழாவிற்கு அறிஞர் சாமி அப்பாத்துரை அவர்கள் இணைப்பாளராகக் கடமையாற்றினார்.

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

அவர் தனது ஆரம்ப உரையில் ஒன்றாரியோ மாகாணத்தில் வாழும் இந்துக்கள் இந்த மாகாணத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அளப்பரிய சேவைகளை ஆற்றியமைக்காகவே ஒன்றாரியோ மாகாண அரசு இந்து சமயத்திற்கு இந்த அங்கீகாரத்தைத் தந்தது என்று தெரிவித்தார்.




அன்றைய தினம் மேற்படி விழா விநாயகர் ஆலயத்தில் தீப ஆராதனை மற்றும் விதிப்படி வழிபாடுகள் மந்திரங்கள் ஓதி ஆரம்பமானது. புல ஆலயங்களில் இதற்காக ஏற்பாடுகள் செய்யயப்பட்டிருந்தன.

தொடர்ந்து பல முக்கியஸ்த்தர்களுடை உரைகள் இடம்பெற்றன. குறிப்பாக ஜெகத்குரு பகவான் ஸ்ரீ நித்தியானந்த பரமசிவம் அவர்கள் இணையவழி ஊடாக அனைவருக்கும் தரிசனம் தந்தார். பின்னர் இந்த விழாவை ஏற்பாடு செய்த அனைத்து பெரியோர்களுக்கும் அவர்களது பெயர்களை தனித்தனியாக உச்சரித்து நன்றி தெரிவித்தார். அத்துடன் நவம்பர் மாதத்தை இந்து பாரம்பரிய மாதமாக அங்கிகரித்தமைக்காக ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வருக்கும் அரசுக்கும் அதன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்தார். மேலும் பயனுள்ள இந்து மதத்தில் அடங்கியுள்ள பல ஆழமான விடயங்களையும் பங்குபற்றியவர்களுக்காக மிகவும் எளிமையாகச் சொன்னார்.

# கனடாவில் மாவீரர்களை நினைவுகூர்ந்த நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர்கள்









கடந்த வெள்ளிக்கிழமை 27ம் திகதி கனடாவில் அமைந்துள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதான பணிமனையில் நடைபெற்ற வணக்க நிகழ்வில், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடிய உறுப்பினர்கள், மாவீரர்களுக்கு விளக்கேற்றி அவர்களை நினைவுகூர்ந்தனர்.

மேற்படி நிகழ்வில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர்களோடு ஆதரவாளர்கள் சிலரும் கலந்து கொண்டு மலரஞ்சலியும் தீப அஞ்சலி செய்தனர். எளிமையான முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வணக்க நிகழ்வில் கொரோனா நோய்த்தொற்றை கவனத்திற் கொண்டு கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார முறைகளை பின்பற்றினர்.